# கோயம்புத்தூர் மாநகராட்சி

அனுப்புநர்

திரு ஆர். வெங்கடாசலம்,
மேயர்,
கோயம்புத்தூர் மாநகராட்சி,
கோயம்புத்தூர்- 641 001

பெறுநர்

மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்கள்,
வார்டு குழுத்தலைவர்கள், ஆளும்கட்சி
மற்றும் எதிர் கட்சித் தலைவர்கள்,
நியமனக்குழு உறுப்பினர்,
நிலைக்குழு தலைவர்கள், மற்றும்,
அனைத்து மாமன்ற உறுப்பினர்கள்
கோயம்புத்தூர் மாநகராட்சி
அனைத்துப் பிரிவுத்
தலைமைகள், கோயம்புத்தூர்
மாநகராட்சி சட்டமன்ற உறுப்பினர்கள்
(கோவை கிழக்கு, மேற்கு,
தொண்டாமுத்தூர், பேரூர் மற்றும்
சிங்காநல்லூர் சட்டமன்ற தொகுதிகள்)
பாராளுமன்ற உறுப்பினர்கள்
(கோவை மற்றும் நீலகிரி
பாராளுமன்றத் தொகுதிகள்)

**ந.க.எண் : 000375 / 2007 / எம்சி. 8 நாள் 31.1.2007**

அய்யா /அம்மா,

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – மாமன்ற அவசரக் கூட்டம் - 02-02-2007-ல் நடைபெறுவது – தொடர்பாக.

-----------

கோயம்புத்தூர் மாநகராட்சியின் மாமன்ற அவசரக் கூட்டம் வரும் 02.02.2007 ம் தேதி வெள்ளிக் கிழமை காலை 10.30 மணிக்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் தலைமையில் விக்டோரியா உறால் மாமன்றக் கூடத்தில் நடைபெற உள்ளது. அது சமயம் அனைத்து மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் அனைத்து தலைமை அலுவலர்களும் மேற்படி கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இக்கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரல் (**Agenda of the Urgent Council Meeting**) இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

இணைப்பு : கூட்டக்குறிப்பு

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

/ உண்மைநகல் உத்திரவின்படி/

மாமன்ற செயலாளர்,
கோயம்புத்தூர் மாநகராட்சி

நகல் :
ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி
துணை ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி

**2.02.07 மாமன்ற அவசரக் கூட்டத்தின் நிகழ்ச்சி நிரல்**

| | |
|---|---|
| பொருளடக்கம் | |
| அ) திருக்குறள் வாசித்து மன்ற நிகழ்ச்சியை துவக்குதல்<br><br>ஆ) தீண்டாமை பழக்கத்தை கைவிட மேற்கொள்ளும் உறுதிமொழி | |
| வ.எண். | ஈ). தீர்மானத்திற்குரிய பொருள் |
| 1. | பொறியியல் பிரிவு - குடிநீர் விநியோகம் - சிறுவாணி குடிநீர்த்திட்டம் - பராமரிப்பு பணி – மாநகராட்சி ஏற்று பராமரித்தல் தொடர்பாக |
| 2. | பொறியியல் பிரிவு - குடிநீர் விநியோகம் - ஜவஹர்லால் நேரு தேசிய புனரமைப்பு திட்டத்தின் கீழ் குடிநீர் விநியோகத்திட்டம் புனரமைப்பு செய்தல் - தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் அறிக்கை தயாரித்தல் - மாமன்ற அனுமதி தொடர்பாக. |
| 3 | பொறியியல் பிரிவு - தேசிய நெடுஞ்சாலை மற்றும் நெடுஞ்சாலைத்துறையின் பராமரிப்பில் உள்ள சாலைகளை மாநராட்சி வசம் ஒப்படைத்தல் - அரசின் அனுமதி கோருதல் தொடர்பாக. |
| 4 | பொறியியல் பிரிவு - JNNURM திட்டத்தின் கீழ் குளங்கள் மற்றும் வாய்க்கால்கள் புனரமைத்தல் - பொதுப்பணித்துறைக்குச் சொந்தமான குளங்கள் மற்றும் வாய்க்கால்களில் அமுல் படுத்துதல் - மாநகராட்சி வசம் ஒப்படைக்க கோருதல் - தொடர்பாக. |
| 5 | பொறியியல் பிரிவு - கிழக்கு மண்டலம் - வார்டு எண்.10 – காந்தி நகர் பகுதி குட்டை – 4.58 ஏக்கர் குட்டைப்பகுதி – அபிவிருத்தி செய்ய மாவட்ட நிர்வாகத்தை க் கோருதல் - தொடர்பாக. |
| 6 | பொறியியல் பிரிவு - JNNURM திட்டத்தை செயல்படுத்துதல் - திட்ட மேலாண்மை ஆலோசகர்கள் நியமித்தல் - மாமன்ற அனுமதி தொடர்பாக. |
| 7 | பொறியியல் பிரிவு - JNNURM – போக்குவரத்து மேலாண்மை மற்றும் சாலை மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளுதல் DPR தயாரித்தல் - தி/ள் வில்பர் ஸ்மித் அசோசியேட்ஸ் லிமிடெட், பெங்களுர் நிறுவனத்தினரின் குறைந்த விலைப்புள்ளி ஏற்றல் - தொடர்பாக. |
| 8 | நகரமைப்பு பிரிவு - தெற்கு மண்டலம் - வார்டு எண்.25 – திருச்சி சாலை அரசு மருத்துவமனை எதிரில் உள்ள பேருந்து நிலையம் - நிழல்குடை புதுப்பித்தல் முதலிய பணிகள் செய்து விளம்பரம் செய்யும் அனுமதி – மாமன்ற அனுமதி தொடர்பாக. |
| 9 | பொறியியல் பிரிவு - மாநகராட்சி ஆய்வு மாளிகை வளாகம் - தெற்கு மண்டல அலுவலகம் கட்டுதல் பணி – ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - தொடர்பாக |
| 10 | பொறியியல் பிரிவு - இலகுரக மோட்டார் வாகனம் TCC 2990 – கழிவு செய்தல் மற்றும் புதிய வாகனம் வாங்குதல் தொடர்பாக |
| 11 | பொறியியல் பிரிவு - 22 அபிவிருத்திப்பணிகள் மேற்கொள்ள மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக. |
| 12 | மேற்கு மண்டலம் - நகரமைப்பு பிரிவு ந.அ.எண்.11/7/2பி தரை மற்றும் மூன்று தளம் அடுக்குமாடி கட்டிடம் - தொழிற்சாலை பகுதியிலிருந்து குடியிருப்பு பகுதியாக மாற்றுதல் தொடர்பாக. |

| | |
|---|---|
| 13 | தெற்கு மண்டலம் - வார்டு எண்.12 – க.ச.எண்.132, 134, 137ஏ/1 - 5.92 ஏக்கர் நிலம் பூங்கா மற்றும் விளையாடும் இடம் பகுதியிலிருந்து நீக்கம் செய்து குடியிருப்பு பகுதியாக மாற்றம் செய்தல் - தொடர்பாக. |
| 14 | வடக்கு மண்டலம - நகரமைப்பு பிரிவு - விளாங்குறிச்சி கிராமம் க.ச.எண்.488/5பி 488/5சி, 488/1 - 2.82 ஏக்கர் மனையிடம் - பல அ டுக்குமாடி கட்டும் பகுதியாக அறிவித்தல் - தொடர்பாக. |
| 15 | தெற்கு மண்டலம் - நகரமைப்பு பிரிவு - க.ச.எண்.509/2 முதலியவை 13 ஏக்கர் 28813 சதுர அடி - தொழிற்சாலை பகுதியிலிருந்து கலப்பு குடியிருப்பு பகுதியாக மாற்றம் செய்து பலமாடி கட்டிடம் கட்டும் பகுதியாக அறிவித்தல் - தொடர்பாக. |
| 16 | தெற்கு மண்டலம் - வார்டு எண்.54, - க.ச.எண்.353/2 முதலியன - 21.64 ஏக்கர் நிலம் - விவசாய நில உபயோகத்திலிருந்து கலப்பு குடியிருப்பு பகுதியாக மாற்றம் செய்து அறிவித்தல் - தொடர்பாக. |
| 17 | வடக்கு மண்டலம் - நகரமைப்பு பிரிவு - சௌரிபாளையம் கிராமம் சர்வே எண். 394/1 பாகம் முதலியன மற்றும் கிருஷ்ணராயபுரம் கிராமம் சர்வே எண்.332 (பாகம்) முதலியன – 3.54 ஏக்கர் நிலம் - தொழிற்சாலைப்பகுதியிலிருந்து குடியிருப்பு பகுதியாக மாற்றி பல மாடி கட்டிடம் கட்டும் பகுதியாக அறிவித்தல் தொடர்பாக. |
| 18 | நகரமைப்பு பிரிவு - தமிழ்நாடு குடிசைமாற்று வாரியம் மற்றும் கோவை மாநகராட்சி - ஜவஹர்லால் நேரு நகர்புற வளர்ச்சி திட்டம் - 15.0 ஏக்கர் உக்கடம் கழிவு நீர் பண்ணை நிலம் - 2232 அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டுதல் - விவசாய நில உபயோகத்திலிருந்து குடியிருப்பு நில உபயோகப்பகுதியாக மாற்றம் செய்து அறிவித்தல் - தொடர்பாக. |
| 19 | கிழக்கு மண்டலம் - நகரமைப்பு பிரிவு - ராமநாதபுரம் - 80 அடி திட்டசாலைக்கு கையகப்படுத்தப்பட்ட நிலம் - ஈட்டுத் தொகை வழங்குவது சம்மந்தமாக. |
| | நன்றியுரை |

## திருக்குறள்

**ஒல்லும்வா யெல்லாம் வினை நன்றே ஒல்லாக்கால்**

**செல்லும்வாய் நோக்கிச் செயல்.**

**(குறள் - 673)**

## விளக்கம்

**இயலும் இடங்களில் எல்லாம் செயல் முடிப்பது நலம்தரும். அவ்வாறு இயலாத இடமாயின் அதற்கு ஏற்ற வழியை அறிந்து அந்தச் செயலை முடிக்க வேண்டும்.**

**- திருவள்ளுவர்.**

## ஆ. தீண்டாமை பழக்கத்தை கைவிட மேற்கொள்ளும் உறுதிமொழி

இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகனாகிய / குடிமகளாகிய நான், நமது அரசியல் அமைப்பின்படி, தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர்மீதும் சமூக வேற்றுமையை, மனம்,வாக்கு, செயல் என்ற எந்த வகையிலும் கடைபிடிக்க மாட்டேன் என்று இதனால் உளமார உறுதி அளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க, சாதி, சமய வேறுபாடற்ற சமத்துவ சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும். மேலும், தீண்டத்தகாதவர்கள் என்ற கொடுமைக்கு ஆளாகியுள்ள மக்களிடையே காணப்படும் தீண்டாமை உணர்வையும் போக்குவது நமது சமூகக் கடமை என்பதையும் உணர்ந்து செயல்படுவேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப் பற்றிற்கும் இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்குமென்றும் இதனால் உளமார உறுதியளிக்கிறேன்.

**பொருள் எண். 1**

கோயம்புத்தூர் மாநகராட்சிப் பகுதிகளுக்கு குடிநீர் தேவையை பூர்த்தி செய்ய பிரதான நீராதாரமாக விளங்குவது சிறுவாணி குடிநீர்த் திட்டம் ஆகும். இத்திட்டத்தின் கீழ் 101.40 மில்லியன்லிட்டர் குடிநீர் உற்பத்தி செய்யப்பட்டு மாநகருக்கு மட்டும் தினசரி 83 மில்லியன் லிட்டர் குடிநீர் வரை விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. 23-11-1993 நாளிட்ட நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண். 270ல் சிறுவாணி குடிநீர்த் திட்ட பராமரிப்பு பணியினை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் தொடர்ந்து மேற்கொள்ள அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. சிறுவாணி குடிநீர்த் திட்ட பராமரிப்பினை மாநகராட்சி கேட்டு கொண்டதற்கிணங்க ஏப்ரல் 1984 முதல் 20 ஆண்டுகால பராமரிப்பு ஒப்பந்தத்தின்படி தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் பராமரிப்பினை மேற்கொண்டு வருகிறது. மேற்படி ஒப்பந்தம் ஏப்ரல் மாதம் 2004 ல் காலாவதி ஆகிவிட்டது.

கோவை மாமன்ற தீர்மான எண்.429 நாள் 28-3-2002 மற்றும் தீர்மான எண்.159 நாள் 29-9-2003 ல் சிறுவாணி குடிநீர்த் திட்டத்தினை கோவை மாநகராட்சி ஏற்று பராமரிக்க அரசின் அனுமதிக்கு அனுப்பப்பட்டது.

கண்காணிப்பு பொறியாளர், தமிழ்நாடு குடிநீர்வடிகால் வரியம் கோவை – நீலகிரி வட்டம் அவர்களது கடிதம் எண். எப் /சிறுவாணி /எ.இ.1/.2005 சி.என்சி /17-11-05 ம் தேதிய கடிதத்தில் தற்பொழுதுள்ள சிறுவாணி குடிநீர்த்திட்டத்தை இயக்கி பராமரிக்கும் பணிகளை உலகவங்கியின் பரிந்துரையின் படியும் வழியோர கிராமங்களை உள்ளடக்கிய குடிநீர்த் திட்ட பராமரிப்பினை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியமே மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதால் மாநகராட்சி ஆணையர் அவர்களின் மேற்படி பிரேரணை அரசால் மறுக்கப்பட்டது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜவஹர்லால் நேரு நகர் புனர் அமைப்பு திட்டத்தின் கோட்பாடுகளுக்கிணங்க 24 மணி நேரமும் தண்ணீர் வழங்க வேண்டும் என்ற அடிப்படையில் சிறுவாணி குடிநீர் திட்ட பராமரிப்பு பணியினை கீழ்க்கண்ட காரணங்களுக்காக மாநகராட்சியிடம் ஒப்படைக்க மீண்டும் அரசின் அனுமதியை கோரலாம்.

புதிய நீர்த்தடுப்பு அணை கடந்த 1982 ம் ஆண்டு கட்டபட்ட பின்பு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு கோயம்புத்தூர் மாநகராட்சியால் 1977 – 1978 முதல்31-03-1998 வரை செலுத்தப்பட வேண்டிய பராமரிப்புக் கட்டணம் ரூ.6.97 கோடி தண்ட வட்டியுடன் முழுவதுமாக செலுத்தப்பட்டு விட்டது.

மேலும் சிறுவாணி திட்டத்திலிருந்து தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் கோயம்புத்தூர் மாநராட்சிக்கு வழங்கப்படும் குடிநீருக்கு 1000 லிட்டருக்கு ரூ.3.50 என குடிநீர்க் கட்டணம் நிர்ணயம் செய்து அரசாணை எண். 252, ஊரக வளர்ச்சித்துறை நாள் 11-8-97 ன் படி 1-04-1998 முதல் 1000 லிட்டர்/ ரூ. 3.50 என்ற விகிதத்தில் குடிநீர்க் கட்டணம் எழுப்பப்பட்டு மாநகராட்சியால் செலுத்தப்பட்டு வருகிறது.

**அட்டவணை 1**

**தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு செலுத்த வேண்டிய குடிநீர் கட்டண விபரம்**

**1000 லிட்டர் / ரூ.3.50 ( 1-04-1998 முதல் 30-09-2002 வரை)**

| வ.எண். | வருடம் | குடிநீர் கட்டணம் | செலுத்திய விபரம் | நிலுவைத் தொகை |
|---|---|---|---|---|
| 1 | 1998-1999 | 0115584265 | 7500000 | 108084265 |
| 2 | 1999-2000 | 114213868 | - | 114213868 |
| 3 | 2000-2001 | 105468242 | (-)999367 | 106467609 |
| 4 | 2001-2002 | 99402786 | 27073000 | 72329786 |
| 5 | 4/2002-9/2002 | 46365664 | - | 46365664 |
| | **மொத்தம்** | **481034825** | **33573633** | **447461192** |

1-04-1998 முதல் 30-09-2002 வரை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு மாநகராட்சி செலுத்த வேண்டிய குடிநீர்க் கட்டண நிலுவைத் தொகை ரூ.44.75 கோடி ஆகும்.

இரண்டாவதாக பிறப்பிக்கப்பட்ட அரசாணை எண் 136 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை நாள். 3-10-2002 ன் படி தமிழ்நாடுகுடிநீர் வடிகால் வாரியம் குடிநீர்க் கட்டணத்தை 1000 லிட்டருக்கு ரூ 3.50 என்ற நிலையிலிருந்து 1000 லிட்டருக்கு ரூ 4.50 என உயர்த்தப்பட்டது.

**அட்டவணை – 2**

**தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு செலுத்த வேண்டிய குடிநீர் கட்டண விபரம் 1000 லிட்டர் / ரூ.4.50 ( 1-10-2002 முதல் 30-11-2006 வரை)**

| வ.எண். | வருடம் | குடிநீர் கட்டணம் | செலுத்திய விபரம் | நிலுவைத் தொகை |
|---|---|---|---|---|
| 1 | 10/2002-3/2003 | 38884639 | 22594882 | 16289757 |
| 2 | 2003-2004 | 54419982 | 10300000 | 44119982 |
| 3 | 2004-2005 | 114033405 | 10000000 | 104033405 |
| 4 | 2005-2006 | 128410550 | 37519012 | 90891538 |
| 5 | 2006-2007 11/2006 | 22277070 | 10084155 | 82192915 |
| | **மொத்தம்** | **428025646** | **90498049** | **337527597** |

எனவே, புதிய அரசாணையின் படி தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு 1-04-1998 முதல் 30-11-2008 வரை இரண்டு அட்டவணைகளின் படி மொத்தம் செலுத்த வேண்டிய குடிநீர் கட்டணம் ரூ.78.50 கோடி நிலுவையில் உள்ளது.

மேற்படி சிறுவாணி குடிநீர் திட்டமானது புவிஈர்ப்பு விசையின் மூலம் சிறுவாணி அடிவாரத்திலிருந்து எந்தவிதமான உந்துவிசை கருவி உதவி இல்லாமல் பெறப்படுவதால் குடிநீர் சுத்திகரிப்பு பணிக்கு மட்டுமே செலவு ஏற்படுகிறது. அதனால் மேற்படி திட்டத்தினை மாநகராட்சியால் பராமரிப்பு மேற்கொள்ளும் போது அதற்குண்டான அத்தியாவசிய பணியாளர்களுக்குண்டான ஊதியம் மற்றும் பராமரிப்பு தொகை ஆண்டு ஒன்றுக்கு ரூ 1.30 கோடிக்குள் தான் வரும் என எதிர்பார்க்கப்படுகிறது. (அட்டவணை எண். 3)

**அட்டவணை எண். 3**

**குடிநீர் சுத்திகரிப்பு பணிக்குண்டான செலவு பட்டியல்**

| வ.எண். | பதவியின் பெயர் | எண்ணிக்கை | வருடாந்திர ஊதியம் ரூ இலட்சத்தில் | குறிப்பு |
|---|---|---|---|---|
| 1 | நிர்வாகப் பொறியாளர் | 1 | 2.40 | |
| 2 | உதவி பொறியாளர் | 1 | 1.80 | |
| 3 | தேர்ச்சி திறன் உதவியாளர் நிலை 1 | 5 | 6.00 | |
| 4 | தேர்ச்சி திறன் உதவியாளர் நிலை 2 | 10 | 9.50 | |
| 5 | உதவியாளர் | 3 | 2.40 | |
| 6 | அலுவலக உதவியாளர் | 1 | 0.75 | |
| 7 | காவல் பணியாளர் | 3 | 2.10 | |
| 8 | ஓட்டுநர் | 1 | 1.20 | |
| 9 | பராமரிப்பு பணி வாகனம் | | 5.00 | |
| 10 | எரிபொருள் | 500லி/மாதம் | 3.00 | |
| 11 | குளோரின் | 2.00/ மாதம் | 24.00 | |
| 12 | இரசாயனம் | 2.00/ மாதம் | 24.00 | |
| 13 | பராமரிப்பு பணிகள் | 4.00/ மாதம் | 48.00 | |
| | **மொத்த செலவினம்** | | **130.15** | |

அணை பராமரிப்பிற்குண்டான தொகையினை ஆண்டு ஒன்றுக்கு ரூ 3.00 கோடி வரை மாநகராட்சியிலிருந்து குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக தற்போது செலுத்தி வருவதை தவிர்த்து நேரடியாக கேரள அரசுக்கு செலுத்தலாம். மேலும் மாசு கட்டுப்பாட்டு வாரியத்திற்கு செலுத்த வேண்டிய வருடாந்திர தொகையான ரூ.0.06 கோடியினையும் சேர்த்து கணக்கீடு செய்தால் மாநராட்சிக்கு மேற்படிதிட்டத்தின் மூலம் உபரி வருமானம் பெற வாய்ப்புள்ளது. மேலும் குடிநீர் திட்டத்தினை மாநகராட்சி பராமரிப்பு செய்வதால் மாநகரை சுற்றியுள்ள கிராமங்களுக்கு தினசரி உபயோகிக்கப்படும் 200 லட்சம் குடிநீருக்குண்டான கட்டணத்தின் மூலம் கிடைக்க கூடிய வருடாந்திர வருவாய் ரூ.3.00 கோடியை குடிநீர் வடிகால் வாரியத்திற்கு பதிலாக மாநகராட்சியே வசூல் செய்து கொள்ளலாம்.

**அட்டவணை எண். 4**
**த.கு.வ.வாரியத்திற்கு குடிநீர் கட்டணம் செலுத்திய விபரம்**

| வ.எண். | வருடம் | குடிநீர் கட்டணம் | செலுத்திய விபரம் | நிலுவைத் தொகை |
|---|---|---|---|---|
| 1 | 1998-1999 | 115584265 | 13000000 | 7500000 |
| 2 | 1999-2000 | 114213868 | 13000000 | - |
| 3 | 2000-2001 | 105468242 | 13000000 | (-)999367 |
| 4 | 2001-2002 | 99402786 | 13000000 | 27073000 |
| 5 | 4/2002-9/2002 | 46385664 | 650000 | - |
| 6 | 10/2002-3/2003 | 38884639 | 650000 | 22594882 |
| 7 | 2003-2004 | 54419982 | 13000000 | 10300000 |
| 8 | 2004-2005 | 114033405 | 13000000 | 10000000 |
| 9 | 2005-2006 | 128410550 | 13000000 | 37519012 |
| 10 | 2006-2007 11/2006 வரை | 92277070 | 13000000 | 10084155 |
| | **மொத்தம்** | **909060471** | **11700000** | **124071682** |

பராமரிப்புக் கட்டணம் 70.71 இலட்சம் கூடுதலாக செலுத்தப்பட்டுள்ளது.

**அட்டவணை எண்.5**
**குடிநீர் திட்டத்தை மாநகராட்சி பராமரித்தல் அதற்குண்டான வரவு விபரம்.**

| வ.எண். | விபரம் | ரூ. கோடியில் |
|---|---|---|
| 1 | த.கு.வ.வா 1000 லிட்டருக்கு ரூ 4.50 என்ற நிலையில் கட்டப்பட வேண்டிய குடிநீர் கட்டணம் | 10.00 |
| 2 | மாநகராட்சி பராமரிப்பு செய்தால் அதற்குண்டான பராமரிப்பு கட்டணம் | 1.30 |
| | **சேமிப்பு** | **8.70** |

மாநகராட்சிக்கு உபரி வருவாய் வருடத்திற்கு ரூ.8.70 கோடி கிடைக்கும் எனவே, மாநகராட்சிக்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் 1000 லிட்டருக்கு ரூ.4.50 என்ற விகிதத்தில் குடிநீர் கட்டணம் விதிதத்தின் பேரில் கடந்த 1998-1999 ம் ஆண்டு முதல் 11-2006 வரை ரூ.90.91 கோடி விதிக்கப்பட்டுள்ளது. ஆனால், வருடாந்திர பராமரிப்பு கட்டணமாக ரூ 1.30 கோடி வீதம் செலுத்தப்பட்டு இருந்தால் மாநகராட்சி நிதியிலிருந்து 11.70 கோடி மட்டுமே செலுத்தப்பட்டிருக்க வேண்டும். ஆனால் மாநகராட்சி கடந்த ஆண்டுகளுக்கு பராமரிப்பு கட்டணமாக த.கு.வ. வாரியத்திற்கு 11.70 கோடியை விட கூடுதலாக ரூ.70.71 இலட்சம் செலுத்தப்பட்டுள்ளது.

**அட்டவணை எண். 6**
**குடிநீர் திட்டத்தை மாநகராட்சி பராமரித்தல் அதற்குண்டான வரவு விபரம்.**

| வ.எண். | விபரம் | வரவு ரூ . கோடியில் |
|---|---|---|
| 1 | குடிநீர் வரி வசூல் மூலம் | 7.00 |
| 2 | வழியோர கிராமங்களுக்கு வழங்கப்படும் குடிநீருக்குண்டான குடிநீர் கட்டணம் மூலம் | 3.00 |
| | **மொத்தம்** | **10.00** |

**அட்டவணை எண். 7**
**மாநகராட்சி குடிநீர் திட்டத்தை மேற்கொண்டால் அதற்குண்டான செலவு விபரம்.**

| வ.எண். | விபரம் | செலவினம் ரூ . கோடியில் |
|---|---|---|
| 1 | குடிநீர் சுத்திகரிப்பு பணி | 1.30 |
| 2 | கேரள அரசுக்கு செலுத்த வேண்டிய தொகை | 3.00 |
| 3 | மாசு கட்டுப்பாட்டு வாரியத்திற்கு செலுத்த வேண்டிய வருடாந்திர தொகை | 0.06 |
| | **மொத்தம்** | **4.36** |

**அட்டவணை எண். 8**
**குடிநீர் திட்டத்தை மாநகராட்சி பராமரித்தல் அதற்குண்டான வரவு , செலவு விபரம்.**

| வ.எண். | விபரம் | செலவினம் ரூ . கோடியில் |
|---|---|---|
| 1 | குடிநீர் திட்டத்தை மாநகராட்சி பராமரித்தால் அதற்கண்டான வரவு. | 10.00 |
| 2 | குடிநீர் திட்டத்தை மாநகராட்சி பராமரித்தால் அதற்குண்டான செலவு | 4.36 |
| | **வித்தியாசம்** | **5.64** |

எனவே, சிறுவாணி குடிநீா் திட்ட பராமரிப்பினை உடனடியாக மாநகராட்சி மேற்கொண்டால் உபரி தொகை மூலம் குடிநீர்த் திட்டத்திற்குண்டான கடன் மற்றும் வட்டி உட்பட ரூ 56.88 கோடி அரசு மற்றும் ஆயுள்காப்பீட்டு கழகத்திற்கு தவணை முறையில் வருடம் 5.00 கோடி வீதம் செலுத்த முடியும்.

சிறுவாணி மற்றும் பில்லூர் குடிநீா் திட்டதின் கீழ் பெறப்படும் குடிநீரினை 1,05,120 குடிநீா் இணைப்புகள் மூலமாகவும் 2811 பொதுக்குழாய் மூலமாகவும் தினசரி 200 டிரிப்புகள் லாரி மூலமாகவும் விநியோகம் செய்யப்படுகிறது. சிறுவாணி குடிநீா் திட்டத்தின் கீழ் 48,463 இணைப்புகளும் பில்லூா் திட்டத்தின் கீழ் 56,657 இணைப்புகளும் வழங்கப்பட்டுள்ளன. மேற்படி இரண்டு திட்டங்களிலிருந்தும் பெறப்படும் குடிநீா் எதிா்கால தேவையினை பூர்த்தி செய்ய இயலாது என்ற நிலையில் பில்லூா் இரண்டாம் குடிநீா் திட்டம் ஜவஹா்லால் நேரு தேசிய நகா்புற புனரமைப்புத் திட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்டுள்ளது. மேற்படி திட்டத்தினை செயல்படுத்தும் பொழுது மாநகர மக்களுக்கு 365 நாட்களும் 24 மணி நேரமும் தண்ணீா் வழங்க வேண்டும் எனவும் திட்டமிடப்பட்டுள்ளது. இதன் முதல் கட்டமாக சிறுவாணி குடிநீா் திட்டம் மாநகராட்சிக்கு மாற்றம் செய்யப்பட வேண்டும்.

எனவே ஏற்கனவே, மாமன்றத் தீா்மானத்தில் குறிப்பிட்டபடி சிறுவாணி குடிநீா்த்திட்ட பராமரிப்புப் பணிகளை தமிழ்நாடு குடிநீா் வடிகால் வாரியத்திடமிருந்து கோவை மாநகராட்சி வசம் ஒப்படைக்க கோரவும் மற்றும் சிறுவாணி குடிநிா கட்டண நிலுவை ரூ 78.50 கோடி தள்ளுபடி செய்யவும் அரசின் அனுமதிக்கு பிரேரணை அனுப்ப மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது. மேலும் கீழ்க் கண்ட விபரங்களுக்குட்பட்டு மாமன்றத்தின் அனுமதி பெற மாமன்றத்தாள் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. சிறுவாணி குடிநீா் திட்டத்தினை தமிழ்நாடு குடிநீா் வடிகால் வாரியத்திடமிருந்து மாநகராட்சி ஏற்றுக் கொண்டு பராமரிப்பு செய்யலாம்.
2. அதனை சோ்ந்துள்ள அனைத்து சொத்துகள் மற்றும் தளவாடங்களையும் மாநகராட்சியிடம் ஒப்படைப்பு செய்ய கோரலாம்.
3. குடிநீா கட்டணம் நிலுவை ரூ 78.50 கோடி பராமரிப்பு செலவினத்தால் ஒப்பீடு செய்கையில் மிக அதிகமாக உள்ளதால் இத்தொகையினை தள்ளுபடி செய்ய அரசினை கோரலாம்.

**ந.க.எண்.11640/97/ப.வ.(எம்)**

**மாநகர மன்ற தீர்மானம் எண். 246 நாள்.02.02.2007**

**சிறுவாணி குடிநீா்த் திட்டத்தினை தமிழ்நாடு குடிநீா் வடிகால் வாரியத்திடமிருந்து மாநகராட்சி ஏற்று பராமரிப்பு செய்ய அனுமதிக்கப்பட்டது. சிறுவாணி குடிநீா் திட்டத்தினை சோ்ந்த அனைத்து சொத்துக்கள் மற்றும் தளவாடங்களை மாநகராட்சியிடம் ஒப்படைப்பு செய்ய கோர தீா்மானிக்கப்பட்டது. நிலுவை குடிநீா்க் கட்டணம் ரூ.78.50 கோடியினை தள்ளுபடி செய்ய அரசினைக் கோர தீா்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 2</u>**

பொருள்- கோவை மாநகராட்சி - ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்பு திட்டத்தின் கீழ் - குடிநீர் விநியோகத்திட்டம புனரமைப்பு செய்தல் - பற்றியது.

மாநகராட்சி பொதுமக்களின் அடிப்படை வசதியாகிய குடிநீர் வழங்கலுக்கு திட்டம் தீட்டப்பட்டு பயனிலுள்ள தற்போதுள்ள சிறுவாணி திட்டம் மற்றும் பில்லூர் திட்டம் ஆகியவற்றின் மூலம் நாள் ஒன்றுக்கு 145 மில்லியன் லிட்டர் பெறப்பட்டு விநியோகிக்கப்படுகிறது. பெருகிவரும் மக்கள் தொகைக்கு ஏற்ப வரும் நாட்களில் தேவைக்கு ஏற்ப கூடுதலாக நாளொன்றுக்கு 65 மில்லியன் லிட்டர் பெரும் வகையில் மொத்தமாக பில்லூர் தனித்திட்டம் மூலம் நாள் ஒன்றுக்கு 130.00 (65 + 65) மில்லியன் லிட்டர் குடிநீர் பெற மத்திய நகர்புற மேம்பாட்டு அமைச்சகம் பில்லூர் 11 –ம் திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.

தற்போதைய மக்கட்தொகைக்கு தேவையான குடிநீர் பெறப்பட்டும் விநியோகம் செய்யப்படுவதில் வேறுபாடுகள் உள்ளது. காரணம் விநியோகப் பிரதான குழாய் சிறுவாணி திட்டத்தில் சுமார் 40 ஆண்டுகளுக்கு முன்பு வடிவமைத்து பதிக்கப்பட்டது. மேலும், பலபகுதிகளில் குடியிருப்பு வீடுகளை கணக்கிட்டு வடிவமைக்கப்பட்ட குடிநீர் பிரதான குழாய்கள் அடுக்குமாடி குடியிருப்புகள் மற்றும் வணிகவளாகங்களின் தேவையினை பூர்த்தி செய்ய இயலாத நிலையில் குறைவான அழுத்தத்துடன் நீண்டநேரம் விநியோகம் செய்ய வேண்டியுள்ளது. அதன் காரணமாக விநியோகம் ஒரு சில பகுதிகளில் தேவைக்கு கூடுதலாகவும் ஒரு சில பகுதிகளில் பற்றாக்குறையாகவும் விநியோகம் ஆகிறது. மேலும் பில்லூர் குடிநீர்திட்ட பகுதியில் தேவையினை கணக்கிட்டு வடிவமைக்கப்படாமல் மனைப்பிரிவுகளுக்கு பிரதான குழாய் பதிக்கப்பட்டு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டதால் சீரான விநியோகம் இல்லாமல் ஒரு சில பகுதிகளில் ஒருநாள்விட்டு ஒருநாளும் ஒரு சில பகுதிகளில் இருநாட்களுக்கு ஒரு முறையும் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது.

மைய அரசின் நகர்புற மேம்பாட்டு அமைச்சம் பில்லூர் II ம் திட்டத்திற்கு நீர் கொணரும் பிரதான குழாய் மற்றும் ஒரு நீர்தேக்க தொட்டிக்கு மட்டும் ஒப்புதல் அளித்துவிட்டு விநியோகத்திட்டதிற்கு ஏற்கனவே உள்ள பழைய விநியோகத் திட்டத்தினை தற்போதைய தேவைகளுக்கு ஏற்ப வடிவமைத்து நாள் முழுவதும் 24 மணி நேரமும் வாரத்திற்கு 7 நாட்களுக்கும் நீர் வழங்கும் நிலையில் விரிவான திட்டமதிப்பீடு இருமாதங்களுக்குள் தனியே சமர்பிக்க வேண்டுமென நிபந்தனையின் பேரில் பில்லூர் II ம் திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் பில்லூர் II ம் திட்டத்திற்கு விரிவான திட்ட அறிக்கை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய பொறியாளர்களால் தயாரிக்கப்பட்டு ஒப்புதல் பெறப்பட்ட நிலையில் குடிநீர விநியோகத் திட்டத்தினை புனரமைப்பு செய்யவும் விரிவான திட்ட மதிப்பீடு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு ஒப்படைப்பு செய்யலாம். இது குறித்து ஆலோசனை கூட்டம் ஆணையாளர் அறையில் 11-01-2007 ல் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேற்பார்வை பொறியாளர் மற்றும் நிர்வாகப் பொறியாளர், மாநகராட்சிப் பொறியாளர், நிர்வாகப் பொறியாளர் ஆகியோருடன் நடைபெற்ற கூட்டத்தில் பரிசீலனை செய்யப்பட்டது. குறுகிய காலத்தில் புனரமைப்புத் திட்டத்திற்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க வேண்டியுள்ளதால் விரிவான சர்வே எடுத்து கான்டூர் மட்டம் தயாரித்து கொடுத்தல் மற்றும் தெருவில் உள்ள மக்கள்தொகை கணக்கினை மாநகராட்சி தயாரித்து கட்டம் கட்டமாக வழங்கவும் அதன் அடிப்படையில் அப்பகுதிக்கு வடிவமைப்பு மற்றும் விரிவான மதிப்பீடுகளை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் தயாரித்து விரிவான திட்ட அறிக்கை சமர்பிக்க தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய பொறியாளர்கள் ஒப்புதல் தெரிவித்துள்ளனர்.

எனவே, விரிவான விநியோகத்திட்ட புனரமைப்பு மதிப்பீடு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலமாக செய்து பெறவும் 28-02-2007 க்குள் விரிவான திட்ட அறிக்கையினை மைய அரசு அமைச்சகத்திற்கு ஒப்புதல் சமர்ப்பிக்க அறிவுரை வழங்கியுள்ளது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் கோரியுள்ள சர்வே மற்றும் காண்டூர் அளவு, வீதி வாரியாக மக்கள் தொகை கணக்கு ஆகியவற்றை மாநகராட்சி மூலம் தயாரித்து தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு வழங்குவதற்கு மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** - இத்திட்டத்திற்கான விரிவான அறிக்கை தமிழ்நாடு குடிநீர்வடிகால் வாரியம் மூலம் தயார் செய்து மாநராட்சிக்கு சமர்ப்பிக்கவும் , அதற்குண்டான கட்டணத்தை தமிழ்நாடு குடிநீர வடிகால் வாரியத்திற்கு செலுத்தவும் அனுமதிக்கலாம்

**ந.க.எண்: 9190/2002/.ப.வ.(எம்)**

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண். 247 நாள்.02.02.2007</u>**

**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.**

---

<u>பொருள் எண். 3</u>

பொருள் -கோவை மாநகராட்சி – தேசிய நெடுஞ்சாலை மற்றும் நெடுஞ்சாலைத்துறையின் பராமரிப்பில் உள்ள சாலைகளை - மாநகராட்சி ஒருங்கிணைந்த போக்குவரத்து சீரமைப்பு மற்றும் சாலைகள் மேம்பாடு திட்டத்தினை மேற்கொண்டு பராமரிக்கும் பொருட்டு மாநகராட்சி எல்லைக்குள் உள்ள பிறதுறையை சார்ந்த சாலைகளை மாநகராட்சி எடுத்துக் கொள்வது சம்பந்தமாக.

மாநகராட்சியின் எல்லைக்குள் உள்ள தேசிய நெடுஞ்சாலைத்துறை ஆணையகம். தேசிய நெடுஞ்சாலைத்துறையின் சாலைகளில் பொதுமக்களின் பயனுக்காக பதிக்கப்பட்டுள்ள குடிநீர் பிரதான குழாய்கள், புதைச்சாக்கடை குழாய்கள், கிணற்றுநீர், விநியோக குழாய்கள், தெருவிளக்கு மின்சார கேபிள்கள் ஆகியவற்றின் பராமரிப்பு பணிகளான நீர்க்கசிவு சரிசெய்தல், புதிய வீட்டு குழாய் இணைப்பு வழங்குதல் போன்றவற்றிற்கு ஒவ்வொரு முறையும் எழுத்து மூலமாக விண்ணப்பித்து உரிய கட்டணம் செலுத்தப்பட்ட பின்பே அனுமதி வழங்கப்படுகிறது. இது பொதுமக்களுக்கு சேவைகளை வழங்குவதில் காலதாமதம் ஏற்படுகிறது. மேலும் நாளுக்கு நாள் பெருகிவரும் வாகனங்களின் போக்குவரத்தினை கருத்தில் கொண்டு ஒருங்கிணைந்த போக்குவரத்து சீரமைப்பு மற்றும் சாலைகள் மேம்பாட்டு பணிகளான பலமுனை சந்திப்புகளில் மேம்பாலங்கள் கட்டுதல், ரயில்பாதையினை வாகனங்கள் கடக்க மேம்பாலங்கள் கட்டுதல் பேருந்து விரைவு போக்குவரத்து வழித்தடம் அமைத்தல் (BRTS) போன்ற பணிகளுக்கு ஜவஹர்லால் நேரு தேசிய புனரமைப்பு திட்டத்தின் கீழ் மாநகர அபிவிருத்தி திட்டத்தில் சேர்க்கப்பட்டு திட்டம் மத்திய அரசின் நகர்புற அபிவிருத்தி அமைச்சகத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்டு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்நிலையில் மாநகராட்சிக்கு சொந்தமான சாலையினை மட்டுமே இத்திட்டத்தினை அமுல்படுத்த இயலும். மாநகராட்சி எல்லைக்குள் உள்ள கீழ்காணும் பிரதானசாலைகள் தேசிய நெடுஞ்சாலைத்துறை மற்றும் மாநில நெடுஞ்சாலைத்துறையினை சேர்ந்ததாகும்.

**I.இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணைய சாலைகள்**

| | | |
|---|---|---|
| 1. திருச்சிசாலை மற்றும் மேட்டுப்பாளையம் சாலை | - | 17.30 கி.மீ |

**I.I. தேசியநெடுஞ்சாலைத்துறை சாலைகள்**

| | | |
|---|---|---|
| 1. சக்தி சாலை | - | 6.80 கி.மீ |
| 2. ஒப்பணக்கார வீதி | - | 0.60 கி.மீ |
| | | 24.70 கி.மீ |

**I.I.I தமிழ்நாடு அரசு நெடுஞ்சாலைத்துறை சாலைகள்**

| | | |
|---|---|---|
| 1. அவினாசி சாலை | - | 10.40 கி.மீ |
| 2. பாரதியார் சாலை | - | 2.40 கி.மீ |
| 3. புலியகுளம் சாலை | - | 1.28 கி.மீ |
| 4. பங்கஜாமில்சாலை | - | 0.80 கி. மீ |
| 5. நஞ்சுண்டாபுரம் சாலை | - | 0.80 கி.மீ |
| 6. ராமநாதபுரம் போத்தனூர் சாலை | - | 2.40 கி.மீ |
| 7. ஆவாரம்பாளையம் சாலை | - | 1.06 கி.மீ |
| 8. கிராஸ்கட் சாலை | - | 1.60 கி.மீ |
| 9. சலீவன் வீதி | - | 1.00 கி.மீ |
| 10.கௌலி பிரவுன் சாலை | - | 1.38 கி.மீ |
| 11.சிவானந்தாகாலனி சாலை | - | 0.80 கி.மீ |
| 12. சிங்காநல்லூர் பீளமேடு சாலை | - | 3.00 கி.மீ |
| 13. தடாகம் சாலை | - | 4.40 கி.மீ |
| மொத்தம் | | 31.32 கி.மீ |

மாநகராட்சி எல்லைக்குள் ஒருங்கிணைந்த போக்குவரத்து சீரமைப்பு மற்றும் போக்குவரத்து மேம்பாடுகளை அமுல்படுத்த வேண்டுமெனில் பிற துறையினை சேர்ந்த சாலைகளை மாநகராட்சியின் வசம் ஒப்படைப்பு செய்தால் மட்டுமே மாநகராட்சியால் மேற்கண்ட ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்பு திட்டத்தின் கீழ் மத்திய அரசின் மானியம் பெற்று மேற்கொள்ள இயலும். எனவே மேற்குறிப்பிட்ட பிறதுறையின் சேர்ந்த சாலைகளை மாநகராட்சி வசம் எடுத்துக் கொள்ள மத்திய நெடுஞ்சாலைத்துறை ஆணையகம் மத்திய மற்றும் மாநில அரசுகளை ஒப்படைப்பு செய்ய கோருவது குறித்து மன்றத்தின் முடிவுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** - ஒருங்கிணைந்த போக்குவரத்து மேம்பாடினை கருத்தில் கொண்டும் மன்றம் பரிசீலனை செய்தும் மேற்கண்ட சாலைகளை மாநகராட்சிக்கு சம்பந்தப்பட்ட துறைகளை ஒப்படைக்க கோரி அரசினைக் கேட்டுக் கொள்ளலாம்.

**ந.க.எண்: 41101/2006/.எம்.டி.3**

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண். 248 நாள்.02.02.2007</u>**

**ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்பு திட்டத்தின் கீழ் மான்யத்துடன் கூடிய கடன் உதவியுடன் திட்டத்தினை செயல்படுத்துவதற்கு ஏதுவாக பொருளில் குறிப்பிடப்பட்டுள்ள சாலைகளை மாநகராட்சிக்கு ஒப்படைக்க அரசினைக் கோர தீர்மானிக்கப்பட்டது. இத்துடன் இந்திய உணவுக்கழக கிடங்கிலிருந்து சத்தி சாலை வரையுள்ள 1.35கி.மீ நீளமுள்ள இந்திய உணவுக்கழக சாலையினையும் மாநகராட்சிக்கு ஒப்படைக்க அரசினைக் கோர தீர்மானிக்கப்பட்டது.**

---

<u>பொருள் எண் 4</u>

பொருள் - கோவை மாநகராட்சி - ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்பு திட்டத்தின் கீழ் குளங்கள் மற்றும் வாய்கால்களை புனரமைத்து மழைநீர் சேமிப்பு கூட்டமைப்பு திட்டத்தினை மேற்கொள்ளுதல் - நகரில் உள்ள பொதுப் பணித்துறைக்கு சொந்தமான குளங்கள் மற்றும் அதனை சார்ந்த வாய்க்கால்களை இத்திட்டத்தின் கீழ் அமுல்படுத்த மாநகராட்சி வசம் ஒப்படைக்க கோருதல் சம்பந்தமாக.

--------

மாநகரப் பகுதியில் நிலத்தடி நீர்மட்டத்தினை பராமரிக்க நகரை சுற்றியுள்ள பொதுப்பணித்துறைக்கு சொந்தமான நீர்த்தேக்க குளங்களை தூர்வாரி கழிவுநீர் கலப்பதனை தடுத்து கரைகளை பலப்படுத்தி பூங்காக்கள் அமைத்து மழைநீர் சேகரிப்பு உட்கட்டமைப்புகளை மேற்கொள்வதன் மூலம் நிலத்தடி நீர்மட்டம் குறையாமல் பராமரிக்கவும் கழிவுநீர் கலப்பதால் ஏற்படும் சுற்றுச்சூழல் பாதிப்பை தவிர்க்கவும் இயலும். அதற்காக மத்திய அரசு ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்பு திட்டத்தின் கீழ் இப்பணியினை மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மத்திய நகர்புற அமைச்சம் இத்திட்டதிற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது. இத்திட்டத்தை அமுல்படுத்த மேவையான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்யப்படவுள்ள பொதுப்பணித்துறைக்கு சொந்தமான குளங்கள் மற்றும் அதனை சார்ந்த வாய்க்கால்கள் பின்வருமாறு.

1. கிருஷ்ணாபதி குளம்.
2. செல்வாம்பதி குளம்
3. குமாரசாமி - முத்தண்ணன் குளம்
4. பெரிய குளம்
5. நரசாம்பதி குளம்
6. செல்வசிந்தாமணி குளம்
7. வாலாங்குளம்
8. சிங்காநல்லூர் குளம்

மேற்படி குளங்களில் தேக்கப்படும நீர் விவசாய காரியங்களுக்கு உபயோகப்படத்த இயலாத நிலையில்அவைகளின் ஆயக்கட்டு பகுதிகள் பெரும்பாலும் மனைப்பிரிவுகளாக மாற்றப்பட்டுவிட்ட நிலையில் மேற்படி குளங்களை மாநகராட்சி வசம் ஒப்படை செய்தால் மட்டுமே ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்பு திட்டத்தின் மான்யம் பெற்று அதன் கீழ் திட்ட நிதியினை பயன்படுத்தி நீர் நிலைகளை மேம்படுத்த இயலும். ஏனவே மேற்படி எட்டு குளங்கள் மற்றும் அதனை சார்ந்த வாய்க்கால்களை மாநகராட்சி வசம் ஒப்படைப்பு செய்ய அரசினை கோரலாம். இது குறித்து மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** - மேற்கண்ட காரணங்களை கருத்தில் கொண்டு எட்டு குளங்களை பொதுப்பணித் துறையிடமிருந்த மாநகராட்சி பொறுப்பில் ஒப்படைப்பு செய்ய அரசினைக் கேட்டுக் கொள்ளலாம்.

**ந.க.எண்: 13090/2006/.எம்.டி.3**

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண். 249 நாள்.02.02.2007</u>**

**ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்பு திட்டத்தின் கீழ் மான்யத்துடன் கூடிய கடன் உதவியுடன் திட்டத்தினை செயல்படுத்துவதற்கு ஏதுவாக பொருளில் குறிப்பிடப்பட்டுள்ள எட்டு குளங்களை மாநகராட்சிக்கு ஒப்படைக்க அரசினைக் கோர தீர்மானிக்கப்பட்டது.**

---

**<u>பொருள் எண். 5</u>**

கோவை மாநகராட்சி கிழக்கு மண்டலம் வார்டு எண். 10 – ல் உள்ள காந்தி நகர் பகுதியில் உள்ள 458 ஏக்கர் குட்டை பகுதி தற்போது மிகவும் சுகாதாரத்திற்கு தீங்கு விளைவிக்கும் வகையில் அசுத்தமாக உள்ளது. இந்த நிலம் மாவட்ட வருவாய் துறையின் பராமரிப்பில் உள்ளது. இந்த நிலத்தை மாநகராட்சியின் மூலம் அபிவிருத்தி செய்து சுற்று சூழல் பாதுகாப்பாகவும், தூய்மையாக வைக்கவும் அருகில் கழிவு நீர் கால்வாய் ஓடையினை சிறப்பாக நேர்படுத்தி கட்டி பாதுகாப்பான வெள்ள நீரோட்டத்தினை ஏற்படுத்திடவும் இத்திட்டத்தினை ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்புத் திட்டத்தின கீழ் செயல்படுத்திட மேற்படி நிலம் மாநகராட்சிக்கு ஒப்படைப்பு செய்தால் மட்டுமே மேற்கண்ட பணியினை மேற்கொள்ள ஏதுவாக இருக்கும் என்பதால் இந்த 458 ஏக்கர் நிலத்தினை மாநகராட்சி ஒப்படைப்பு செய்ய மாவட்ட நிர்வாகத்திற்கு கடிதம் வைக்க மாமன்றத்திற்கு பொருள் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு - ஒப்புதல் வழங்கலாம்.** **ந.க.எண். 8251/2005/.எம்.டி.3**

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண். 250 நாள்.02.02.2007</u>**

**ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்பு திட்டத்தின் கீழ் மான்யத்துடன் கூடிய கடன் உதவியுடன் திட்டத்தினை செயல்படுத்துவதற்கு ஏதுவாக பொருளில் குறிப்பிடப்பட்டுள்ள 4.58 ஏக்கர் நிலத்தினை மாநகராட்சிக்கு ஒப்படைக்க மாவட்ட நிர்வாகத்தைக் கோர தீர்மானிக்கப்பட்டது.**

---

**<u>பொருள் எண். 6</u>**

கோவை மாநகராட்சி – பணிகள்- பெரிய அளவிலான மூலதனப் பணிகளுக்கு திட்ட மேலாண்மை ஆலோளசகர்களை நியமித்தல் - மாமன்ற அனுமதி வேண்டுதல் தொடர்பு

கோயம்புத்தூர் மாநகராட்சி மாமன்றம் தமது தீர்மான எண். 335 நாள் 22-02-2006 – ல் கோயம்புத்தூர் மாநகராட்சி மூலமாக தயாரிக்கப்பட்டுள்ள புதிய திட்டங்கள் மேம்பாட்டுத் திட்டங்கள் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்புத் திட்டத்தின் கீழ் (JNNURM) மேற்கொள்ளவும் மத்திய மாநில மானியத் தொகைப் பெறவும் மாநகராட்சி பங்குத் தொகையினை செலவு செய்வதற்கும் நிதி நிறுவனங்களிடமிருந்து மீதமுள்ள தொகையை கடனாக பெறுவதற்கும் மாமன்ற அனுமதி வழங்கியுள்ளது.

கோவை மாநகராட்சியில் நிறைவேற்றவுள்ள பெரும் அளவிலான திட்டங்களுக்கு விரிவான திட்ட அறிக்கை மற்றும் வடிவமைப்பு தயாரித்து அதன் அடிப்படையில் மதிப்பீடு தயாரித்தல் வரைபடங்கள் மற்றும் ஒப்பந்தப்புள்ளி படிவங்களும் வரப் பெற்று ஒப்பந்தப் புள்ளிகளுக்கு திறனாய்வு செய்தல் மற்றும் திட்ட மேலாண்மை செய்தல் ஆகியவற்றை செய்ய போதுமான நிபுணத்துவம் இல்லாமையாலும் அதனை மேற்கொள்ள தகுதி வாய்ந்த பணியாளர்கள் இல்லாமையாலும் அன்றாட நடப்பு பணிகளை மட்டுமே கவனிக்கக் கூடிய போதுமான பணியமைப்பு உள்ளமையால் பெரும் அளவிலான திட்டங்களுக்கு உரிய காலகெடுவுக்குள் திட்டங்களை முடிக்க திட்ட தயாரிப்புக்கும் திட்ட மேலாண்மைக்கும் ஆலோசகர்களை நியமிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. எனவே கீழக்கண்ட பணிகளுக்கு ஆலோசகர்களை (P.M.C) நியமிக்க நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களை கேட்டுக் கொள்ள மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

திட்ட மேலாண்மை ஆலோசகர்களை நியமிக்க வேண்டிய பணிகள்.

| வ.எண். | திட்டத்தின் பெயர் |
|---|---|
| 1. | பில்லூர் II குடிநீர்த் திட்டம் |
| 2 | சிறுவாணி மற்றும் பில்லூர் I குடிநீர்த் திட்டங்களை புனரமைப்பு செய்யும் திட்டம் |
| 3 | திடக்கழிவு மேலாண்மை |
| 4 | பாதாள சாக்கடைத் திட்டம் |
| 5 | நகர்புற ஏழ்மை மக்களின் வாழ்க்கைத் தரம் மேம்படுத்துதல். |
| 6 | மழைநீர் வடிகால் |

| | |
|---|---|
| 7 | நீா் நிலைகளை பாதுகாத்து புனரமைத்தல் |
| 8 | போக்குவரத்து மேலாண்மை மற்றும் சாலை மேம்பாடு |
| 9 | அடுக்குமாடி வாகனம் நிறுத்துமிடம். |

**அலுவலகக்குறிப்பு - அனுமதிக்கலாம்** **ந.க.எண். 8251/2005/எம். டி.3**

**மாநகர மன்ற தீா்மானம் எண். 251 நாள்.02.02.2007**

**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீா்மானிக்கப்பட்டது.**

---------------------------------------------------------------------------------------------------------------------------------------

**பொருள் எண். 7**

ஜவஹா்லால் நேரு தேசிய நகா்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கோவை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் போக்குவரத்து மேலாண்மை மற்றும் சாலை மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளும் திட்டத்தினை செயல்படுத்த திட்ட ஆலோசகா்களை நியமிக்க நகராட்சி நகராட்சி நிா்வாக ஆணையாளா் உத்திரவிற்கிணங்க திட்ட கேட்பு அறிக்கை (R.F.P.) கோரப்பட்டது. ஆஅவ்வாறு கோரப்பட்டதில் 28-12-2006 தேதியில் கீழ்க்கண்ட ஆலோசகா்களிடமிருந்து உத்தேச திட்ட அறிக்கைகள் தொழில் நுட்ப கருத்துரை அடங்கிய உறைகள் (Technical Propsal) மற்றும் ( Financial Bid) விலைப்புள்ளி அடங்கிய உறைகள் கீழ்க்கண்டவாறு பெறப்பட்டன.

1. . தி/ள். நேசனல் கன்சல்டன்ஸி பாா் பிளானிங் அண்டு இஞ்சினியரிங் பிரைவேட் லிமிடெட் ஹைதராபாத்.
2. தி/ள்.தி கிரேடியன்ட் அண்டு தி ஆக்சிஸ் (. தி/ள்.ஜெ.வி) சென்னை.
3. தி/ள். வில்பா் ஸ்மித் அசோசியேட்ஸ் பிரைவேட் லிமிடெட். பெங்களூா்.

அவ்வாறு பெறப்பட்ட 3 அறிக்கைகளில் தொழில்நுட்ப தகுதியுடைய கீழ்க்கண்ட இரண்டு ஆலோசகா்கள் தொழில்நுட்ப ஆய்வுக் குழுவால் தெரிவு செய்யப்பட்டு 10-01-2007 அன்று விலைப்புள்ளி அடங்கிய உறைகள் (( Financial Bid) திறக்கப்பட்டன. அதன் விபரம் பின்வருமாறு.

1. . தி/ள். நேசனல் கன்சல்டன்ஸி பாா் பிளானிங் அண்டு இஞ்சினியரிங் பிரைவேட் லிமிடெட் ஹைதராபாத்.
2. தி/ள். வில்பா் ஸ்மித் அசோசியேட்ஸ் பிரைவேட் லிமிடெட். பெங்களூா்.

மேற்கண்ட ஆலோசகா்களில் அதிக மதிப்பெண்கள் பெற்றுள்ள தி/ள். வில்பா் ஸ்மித் அசோசியேட்ஸ் பிரைவேட் லிமிடெட். பெங்களூா். (M/s. Willbur Smith Association Private Limited, Bangalore).

| வ.எண். | ஆலோசக பணிகளின் தன்மை | தொகை ரூ. இலட்சங்களில் | 12.24% சேவை வரிரூ. இலட்சங்களில். |
|---|---|---|---|
| 1 | முதல் கட்டப் பணிகள் | 241.50 | 29.56 |
| | **பேக்கேஜ் - 1** | | |
| | சுமாா் 33 கிலோ மீட்டா் நீளமுள்ள பிரதான சாலைகளின் ஓடுகள் தரத்தினை மேம்படுத்துதல். | | |
| | **பேக்கேஜ் - 2** | | |
| | 5 முக்கிய சாலை சந்திப்புகளில் மேம்பாலங்கள் வடிவமைத்தல் 9 முக்கிய ரயில்வே சந்திப்புகளில் மேம்பாலங்கள் வடிவமைத்தல் விரைவு சாலை மற்றும் பாதசாரிகளுக்கான சுரங்கப்பாதை வடிவமைக்க தள ஆய்வு செய்து விரிவான திட்ட அறிக்கை சமா்ப்பித்தல். | | |
| | **பேக்கேஜ் - 3** | | |

| | | | |
|---|---|---|---|
| | விரைவு பேருந்து வழித்தடம் (BRTS) அமைக்க போக்குவரத்து சா்வே, வழித்தட அமைப்பு, பேருந்து நிறுத்துமிட அமைப்பு , மக்கள் உள்ளே வெளியே செல்லும் அமைப்பு மற்றும் கணினி மூலம் போக்குவரத்து மேலாண்மை செய்து விரிவான மதிப்பீடுகள் தயாா் செய்து அதற்கான ஒப்பந்தப்புள்ளி படிவங்களுடன் விரிவான திட்ட அறிக்கை சமா்ப்பித்தல். | | |

| வ. எண். | ஆலோசக பணிகளின் தன்மை | தொகை ரூ. இலட்சங்களில் | 12.24 % சேவை வரிரூ இலட்சங்களில் |
|---|---|---|---|
| 2. | இரண்டாம் கட்டப் பணிகள் | | |
| | இந்நகரின் தன்மைக்கு பொருந்தும் வகையில் கீழ்காணும் நான்கு இனங்களில் ஏதேனும் ஒருவகையினை தொழில் நுட்ப சாத்திய கூறுகள் தெரிவு செய்து பரிந்துரைத்தல்.<br>• மோனோரயில்<br>• ஆகாய ரயில்<br>• மெட்ரோ ரயில்<br>• இதர போக்குவரத்து வகை | 100.00 | 12.24 |

மேற்படி நிறுவனத்தாரை 12-01-2007 அன்று அவா்களது விலைப்புள்ளியை குறைத்து தரக்கோரியதில் அந்நிறுவனம் முதற்கட்ட பணிகளுக்கான விலைப்புள்ளி மட்டும் ரூ.241.50 இலட்சத்திலிருந்து ரூ.239.00 இலட்சத்திற்கு குறைத்து தர இசைவு தெரிவித்துள்ளனா். ( Rates after Negotiation ). எனவே மேற்கண்ட இரண்டு கட்ட பணிகளுக்கு முறையே ரூ. 239.00 மற்றும் 100.00 இலட்சம் விலைப்புள்ளிகளுக்கு அனுமதிக்கப்பட்ட சேவை வரி 12.24 % ரூ.49.49 இலட்சம் ஆகும்.

மேற்படி பணியை மத்திய அரசின் நகா்ப்புற வளா்ச்சித் துறை இணைச்செயலாளா், தமிழ்நாடு நகராட்சி நிா்வாகம் மற்றும் குடிநீா் வழங்கல் துறை செயலாளா் மற்றும் நகராட்சி நிா்வாக ஆணையா் அவா்களின் 06.11.2006-ம் தேதிய திட்டப்பணிகளை விரைந்து செய்து முடிக்கவும் இப்பணிகளுக்கான ஆலோசகா்களின் அறிக்கையினை 31.12.2006-க்குள் மத்திய அரசிற்கு சென்றடையும் வண்ணம் ஆலோசகா்களின் நியமனம் செய்து விரிவான திட்ட அறிக்கையினை தயாரித்து அனுப்ப வேண்டும் என அறிவுரைகள் வழங்கியுள்ளாா்.

எனவே தி/ள் வில்பா் ஸ்மித் அசோசியேட்ஸ், பிரைவேட் லிமிடெட், பெங்களூா், ( M/s Willbur Smith Associates Private Limited, Bangalore ) அவா்களின் மேற்கண்ட விலைப்புள்ளியை ஏற்று நடப்பு ஆண்டில் 15.03.2007க்குள் ஆலோசகா்களின் அறிக்கையினை மத்திய அரசிற்கு அனுப்பி 31.03.2007க்குள் ஒப்புதலர் பெற்று நிதி ஒதுக்கீடு பெற வேண்டும் என்று அறிவுரைகள் வழங்கியுள்ளதால் அவசர அவசியத்தை கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிா்நோக்கி வணக்கத்திற்குரிய மேயா் அவா்களின் முன் அனுமதி பெற்று விரிவான திட்ட அறிக்கை DPR தயாரிக்க தகுதி வாய்ந்த மேற்கண்ட நிறுவனத்தின் ஜவஹா்லால் நேரு தேசிய புனரமைப்புத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதியிலிருந்து ஈடு செய்து கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:அனுமதிக்கலாம்.** **ந.க.எண். 41101/2006/எம்.டி.3**

**<u>மாநகர மன்ற தீா்மானம் எண். 252 நாள்.02.02.2007</u>**

**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீா்மானிக்கப்பட்டது.**

---

<u>பொருள் எண் : 8</u>

கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலம் 25 வார்டு திருச்சி சாலை அரசு மருத்துவமனை எதிரில் உள்ள நகர பேருந்து நிலையம் தற்போது எவ்வித இருக்கை வசதிகள், கழிப்பிட வசதிகள், குப்பைகளை சேகரிக்கும் வசதிகள் போன்றவைகள் இல்லாமல் அடிக்கடி சுகாதார கேடு குறித்து புகார் வந்து கொண்டேயுள்ளது. அரசு மருத்துவமனைக்கு நோயாளிகளும் அவர்களை பார்க்க வருகின்றவர்களும் அதிகமாக வந்து செல்வதாலும், அருகில் அரசு கலைக் கல்லூரி, நீதி மன்ற வளாகம், இரயில் நிலையம் போன்ற பொது மக்கள் வந்து செல்லும் இடங்கள் உள்ளதால் அடிப்படை வசதிகள் இன்றி பொதுமக்கள் அவதிப்படுகின்றனர்.

இந்நிலையில் மேற்குறிப்பிட்ட இடத்தில் ஸ்ரீ லட்சுமி நரசிம்மர் அட்வெட்டைசிங் நிறுவனத்தார் ரூ.8லட்சம் செலவில் ஆண்கள்/பெண்கள் தனித்தனியாக பயன்படுத்தும் விதத்தில் நவீன கழிப்பிடம் ஒன்றும் கட்டி பராமரித்து தருவதாகவும்,

போக்குவரத்து நிழற்குடையினை 3லட்சம் செலவில் புதுப்பித்து 60 இருக்கைகள் அமைத்து தருவதாகவும்,10 நவீன குப்பை தொட்டிகள், பேருந்து வந்து செல்லும் விபரங்கள், குடிநீர் வசதி, துப்புரவு பணி மேற்கொள்ள பணியாளர்கள் நடைமேடை 2.50 லட்சம், நுழைவாயில் 2.90 லட்சம், இதர வசதிகள் 2.50 லட்சம் போன்றவைகள் செய்து பராமரித்து தருவதாகவும் அதற்கு (1/3) மூன்றில் ஒரு பகுதி விளம்பரம் செய்து கொள்ள எட்டு ஆண்டுகளுக்கு அனுமதி கோரியுள்ளார்.

கீழ்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு அனுமதிப்பது குறித்து மன்றம் பரிசீலிக்கலாம்.

1. மேற்படி நிறுவனத்தார் குறிப்பிட்டுள்ள அனைத்து வசதிகளையும் சொந்த செலவில் மேற்கொள்ள வேண்டும்.
2. போதுமான தண்ணீர் வசதி, குடிநீர் வசதி, குப்பை சேகரிக்கும் வசதி போன்றவைகள் ஏற்படுத்த வேண்டும்.
3. மின் கட்டணம் அவர்களே செலுத்திட வேண்டும்.
4. அப்பகுதி ஒட்டியுள்ள சாலை மற்றும் லங்காகார்னர் பாலம் வரை சுத்தம் செய்து பராமரிக்க வேண்டும்.
5. கழிப்பிடம் கட்டணமாக ரூ.2 வசூல் செய்து கொள்ள வேண்டும். குளிப்பதற்கு ரூ . 3ம், வெண்ணீரில் குளிப்பதற்கு ரூ. 5ம், நிர்ணயம் செய்து அனுமதிக்கலாம்.
6. வேறு ஏதும் வசதிகள் செய்து தர தெரிவிக்கப்பட்டால் செய்து தர வேண்டும்.
7. அனுமதிக்கப்படும் காலம் கூடுதலாக கோரக்கூடாது.
8. அவ்வப்போது தெரிவிக்கப்படும் புதிய நிபந்தனைக்கு கட்டுப்பட வேண்டும்.
9. பகல் மற்றும் இரு நேரங்களிலும் பாதுகாப்பு பணியாளர்களை அமர்த்தப்பட வேண்டும்.
10. மாநகராட்சி அலுவலர்கள் ஆய்வின் போது எடுத்துரைக்கப்படும் ஆய்வுக் குறிப்புகளை உடன் செயல்படுத்தப்பட வேண்டும்.

**அலுவலகக் குறிப்பு** மாமன்றம் பரிசீலித்து அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண். 424/2007/எச்.1/தெற்கு**

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண். 253 நாள்.02.02.2007</u>**

**பொருளில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு பொருளில் குறிப்பிடப்பட்டுள்ள வசதிகள் செய்து கொடுக்க தி/ள். ஸ்ரீ லட்சுமி நரசிம்மர் அட்வர்டைசிங் நிறுவனத்தினரை அனுமதிக்க தீர்மானிக்கப்பட்டது. அதற்கு ஈடாக மூன்றில் ஒரு பகுதி விளம்பரம் செய்து கொள்ள ஆறு ஆண்டுகளுக்கு தி/ள். ஸ்ரீ லட்சுமி நரசிம்மர் அட்வர்டைசிங் நிறுவனத்தினருக்கு அனுமதி வழங்க தீர்மானிக்கப்பட்டது. மேலும் சிறுநீர்க்கழிக்க ரூ.1.00, கழிப்பறை உபயோகிக்க ரூ.1.50, குளிப்பதற்கு ரூ.2.50 மற்றும் வெந்நீரில் குளிப்பதற்கு ரூ.4.00 நிர்ணயம் செய்ய அனுமதிக்கவும் தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 9</u>**

கோவை மாநகராட்சி ஒசூர் சாலையில் உள்ள மாநகராட்சி ஆய்வு மாளிகை வளாகத்தில் உள்ள காலி இடத்தில் தெற்கு மண்டலம் அலுவலகம் கட்ட ரூ.50.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு 23.01.2007-ல் இரண்டாம் முறையாக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், கீழ்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன.

1. தி/ள். விஸ்வநாதன் கன்ஸ்ரக்சன்ஸ் பிரைவேட், லிமிடெட் - 7.85% அதிகம்
2. தி/ள். செந்தில் அன்கோ

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளினை 25.01.2007-ம் தேதிய திறனாய்வுக் குழுவில் பரிசீலனை செய்ததில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள தி/ள் விஸ்வநாதன் கன்ஸ்ரக்சன்ஸ் பிரைவேட், லிமிடெட் அவா்களிடம் ஒப்பந்தப்புள்ளி விலைகளை மேலும் குறைத்து கோர முடிவு செய்யப்பட்டு விலைப்புள்ளியினை குறைத்து கொடுக்க கோரியதில் மேற்படி நிறுவனத்தாா் ஒப்பந்தப்புள்ளி விலையினை மதிப்பீட்டுத் தொகைக்கும் 4.92% அதிகமாக குறைத்து கொடுத்துள்ளனா். மேற்காண் குறைத்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** - இப்பணி குறிப்பிட்ட கால கொடுவுக்குள் முடிக்க வேண்டி இருப்பதாலும், மறு ஒப்பந்தப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தாலும் இப்பணியினை அவசியம் செயல்படுத்த வேண்டியுள்ளதாலும் மதிப்பீட்டை காட்டிலும் 4.92 கூடுதல் சதவீதம் கொடுத்துள்ள தி/ள். விஸ்வநாதன் கன்ஸ்ரக்சன்ஸ் பிரைவேட், லிமிடெட் அவா்களின் **ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் ஏற்றுக்கொள்ளலாம்.**

**ந.க.எண். 9298/01/எம்.டி.3**

**<u>மாநகர மன்ற தீா்மானம் எண். 254 நாள்.02.02.2007</u>**

**அலுவலகக்குறிப்பு ஏற்கலாம் என தீா்மானிக்கப்பட்டது.**

---

**<u>பொருள் எண். 10</u>**

கோயம்புத்தூா் மாநகராட்சியின் அலுவலக பணிகளுக்காக பயன்பாட்டில் உள்ள இலகுரக மோட்டாா் வாகனம் TCC 2990, மகேந்திரா ஈப்பில் ஏற்பட்டுள்ள பெரும் பழுதுகளை நிவா்த்தி செய்ய அரசு அங்கீகாரம் பெற்ற பணிமனைகளிலிருந்து விலைப்புள்ளி கோரப்பட்டதில் பழுதுபாா்ப்பு பணிகளுக்கு தோராயமாக ரூ.78,500/- ஆகும் எனத் தெரிகிறது. மேற்கூறிய வாகனம் கடந்த 24.01.1986-ல் வாங்கப்பட்டு கடந்த 20 ஆண்டுகளாக உபயோகப்படுத்தப்பட்டு வந்ததுடன் 3.00 இலட்சம் கி.மீ. தூரம் ஓடியுள்ளது.

அரசானை ( நிலை ) எண். 983உள்துறை ( போக்குவரத்து – IV ) நாள் 03.08.2004-ன் படி பத்து ஆண்டுகளுக்கு மேற்பட்ட வாகனங்களில் ஏற்படும் பழுதுபாா்பு மற்றும் பராமரிப்பு செலவினம் ஆண்டொண்றிற்கு ரூ.8000/- என நிா்ணயிக்கப்பட்டுள்ளது. தற்போது உத்தேசிக்கப்பட்டுள்ள செலவினம் ரூ.78,500/- அரசு நிா்ணயித்த உச்ச வரம்பினை காட்டிலும் மிகவும் கூடுதலாக உள்ளது. மேலும் அரசாணை ( நிலை ) எண். 2275 உள்துறை ( போக்குவரத்து – E ) நாள் 10.10.1990-ன் படி மேற்கூறிய வகை வாகனங்கள் 10 ஆண்டுகளுக்கு மேல் ஆகியிருந்தாலோ மற்றும் 2.00 இலட்சம் கி.மீ. தூரம் ஓடியிருந்தாலோ இதில் எது பின்னாளில் அமைகிறதோ அந்நாளில் அந்த வாகனத்தினை கழிவு செய்யலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி மோட்டாா் வாகனம் TCC 2990-க்கு தற்போது உத்தேசிக்கப்பட்டுள்ள செலவினமான ரூ.78,500/- மிகவும் கூடுதலாக உள்ளதாலும் அவ்வாகம் வாங்கப்பட்டு 20 ஆண்டுகளுக்கு மேல் ஆகியுள்ளதாலும், அது சுமாா் 3.00 இலட்சம் கி.மீ. தூரம் ஓடியுள்ளதாலும் அதனை கழிவு செய்துவிட்டு அதற்கு பதில் புதியதாக ஒரு ஈப்பினை நகராட்சிகளின் நிா்வாக ஆணையரின் அனுமதி பெற்று அலுவலக நடைமுறையினை பின்பற்றி வாங்கிக்கொள்ளலாம். இப்பொருள் குறித்து மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு அனுமதிக்கலாம்.** **ந.க.எண். 1130/2007/எம்.டி.3**

**<u>மாநகர மன்ற தீா்மானம் எண். 255 நாள்.02.02.2007</u>**

**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீா்மானிக்கப்பட்டது.**

---

**பொருள் எண். 11**

கோவை மாநகராட்சி பகுதிகளில் கீழ்கண்டுள்ள அபிவிருத்திப்பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக் குழு பரிசீலனை செய்து கீழ்கண்டவாறு பணிகளை ஏற்க 23.01.2007 அன்று பரிந்துரை செய்துள்ளது.

| வ. எ ண். | கோப்பு எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டு த் தொகை ரூ. இலட்சத் தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | ஒப்பந்ததாரா் பெயா் | ஒப்பந்தப் புள்ளியில் குறிப்பிட்டுள்ள சதவீதம் |
|---|---|---|---|---|---|---|
| 1. | 7223/06 எம்.டி.4 | வாா்டு எண்.27 அனுப்பா்பாளையம் மாநரகாட்சி மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் ஆழ்குழாய் கிணறு அமைத்தல் | 1.60 | 12-12-06 இரண்டாம் அழைப்பு | தி/ள். சப்தகிரி போா்வெல் | 4.92% அதிகம் |
| 2. | 5626/06 எம்.டி.4 | கோவை மாநகராட்சி பிரதான அலுவலகத்தில் ஜெனரேட்டா் அறை கட்டுதல் | 5.00 | 28-11-06 இரண்டாம் அழைப்பு | தி/ள். ஸ்ரீ எலக்ட்ரிக்கல்ஸ் | 4.89% அதிகம் |
| 3. | 9041/06 எம்.டி.2 | வாா்டு எண். 1 சின்னசாமி அவின்யூ, கிரியம்மன் கோவில் வீதிகளில் குடிநீா் பகிா்மானக் குழாய் பதித்தல் | 3.50 | 10-01-07 நான்காம் அழைப்பு | திருமதி. வி. பாக்கியம் | 4.31% அதிகம் |
| 4. | 9058/06 எம்.டி.2 | வாா்டு எண் 3 லட்சுமி காா்டன் அனுகு சாலை, வி.கே.ரோடு ஆகியவற்றில் குடிநீா் பகிா்மானக் குழாய் பதித்தல் | 4.80 | 10-01-07 நான்காம் அழைப்பு | திருமதி. வி. பாக்கியம் | 4.25% அதிகம் |
| 5. | 9031/05 எம்.டி.2 | வாா்டு எண். 9 அண்ணா நகா் முதல் பாரதி நகா் முடிய உள்ள பகுதியில் குடிநீா் பகிா்மானக் குழாய் பதித்தல் | 4.80 | 10-01-07 ஐந்தாம் அழைப்பு | தி/ள்.அலமு அசோசியேட்ஸ் | 4.28% அதிகம் |
| 6. | 9030/06 எம்.டி.2 | வாா்டு எண். 9 தச்சன் தோட்டம் பிரதான சாலை மற்றும் குறுக்கு சாலைகளில் குடிநீா் பகிா்மான குழாய் பதித்தல் | 3.80 | 10-01-07 ஐந்தாம் அழைப்பு | தி/ள்.அலமு அசோசியேட்ஸ் | 4.20% அதிகம் |
| 7. | 9028/06 எம்.டி.2 | வாா்டு எண். 9 தாமோதர சாமி லே அவுட், விஜயலட்சுமி சாலைகளில் குடிநீா் பகிா்மானக் குழாய் பதித்தல் | 5.00 | 10-01-07 ஐந்தாம் அழைப்பு | தி/ள். அலமு அசோசியேட்ஸ் | 4.38% அதிகம் |
| 8. | 9035/06 எம்.டி.2 | வாா்டு எண். 11 சீனிவாசா நகா் தெற்கு மற்றும் வடக்கு பகுதிகளில் குடிநீா் பகிா்மானக் குழாய் பதித்தல் | 4.90 | 10-01-07 ஐந்தாம் அழைப்பு | திருமதி. கே. ரேணுகாதேவி | 4.72% அதிகம் |
| 9. | 9032/06 எம்.டி.2 | வாா்டு எண். 10 மகாலட்சுமி நகா், முல்லைநகா், கொண்டசாமி நகா், கமலா மில் காலனி, கிருஷ்ணா நகா் மற்றும் ஆண்டாள் வீதிகளுக்கு குடிநீா் பகிா்மானக் குழாய் பதித்தல் | 4.60 | 10-01-07 ஐந்தாம் அழைப்பு | திருமதி.கே.ரேணு காதேவி | 4.32% அதிகம் |
| 10. | 9036/06 எம்.டி.2 | வாா்டு எண் 11 ஜெய் ஸ்ரீ நகா், வெங்கிட லட்சுமி நகரில் குடிநீா் பகிா்மானக் குழாய் பதித்தல் | 4.80 | 10-1-07 ஐந்தாம் அழைப்பு | திருமதி. கே. ரேணுகாதேவி | 4.17% அதிகம் |
| 11. | 9039/06 எம்.டி.2 | வாா்டு எண். 15.16 கருணாநிதி நகா், பாலன் நகா், ரங்கநாயகி லே அவுட் மற்றும் இந்திரா நகரில் குடிநீா் பகிா்மான குழாய் பதித்தல் | 4.80 | 10-01-07 ஐந்தாம் அழைப்பு | திருமதி. கே. ரோணுகாதேவி | 3.45% அதிகம் |
| 12. | 9099/06 எம்.டி.2 | வாா்டு எண். 22 பெரியாா் நகா், வசந்தம் காலனி, மருதாசலம் வீதியில் குடிநீா் பகிா்மானக் குழாய் பதித்தல் | 3.00 | 10-01-07 ஐந்தாம் அழைப்பு | தி/ள். அலமு அசோசியேட்ஸ் | 4.33% அதிகம் |
| 13. | 9002/06 எம்.டி. | வடக்கு மண்டலம் வாா்டு எண் 65ல் குடிநீா் பகிா்மானக் குழாய் பதித்தல் | 5.00 | 10-01-07 நான்காம் அழைப்பு | திருமதி. வி. பாக்கியம் | 3.84% அதிகம் |
| | 9042,06 எம்.டி.2 | வாா்டு எண். 2 ராமசாமி நாயுடு லே அவுட், கண்ணைய நாயுடு லே அவுட்டில் குடிநீா் பகிா்மானக் குழாய் பதித்தல் | 2.90 | 10-01-07 நான்காம் அழைப்பு | திருமதி. வி. பாக்கியம் | 3.88% அதிகம் |
| 15. | 9040/06 எம்.டி.2 | வாா்டு எண்.2 பட்டாளம்மன் கோவில் வீதிவிஸ்தரிப்பு, எல்லைத்தோட்டம் சாலை விஸ்திரிப்பு, ஆா்.கே.மில். காலனியில் குடிநீா் பகிா்மானக் குழாய் பதித்தல் | 2.40 | 10.01.07 நான்காம் அழைப்பு | திருமதி. வி. பாக்கியம் | 4.13% அதிகம் |
| 16. | 9043/06 எம்.டி.2 | வாா்டு எண்.3 ஓம் முருகன் வீதி, லட்சுமி வீதி, ரங்கநாயகி லே அவுட், என். ஆா்.ஜி. நகரில் குடிநீா் பகிா்மான குழாய் பதித்தல் | 3.75 | 10.01.07 நான்காம் அழைப்பு | திருமதி. வி.பாக்கியம் | 4.31% அதிகம் |
| 17. | 9763/05 எம்.டி. | வாா்டு எண் 6 காமராஜ் நகரில் ஆண்கள் மற்றும் பெண்கள் பொது கழிப்பிடம் கட்டுதல் | 5.00 | 10.01.07 நான்காம் அழைப்பு | திருமதி. வி. பாக்கியம் | 4.52% அதிகம் |
| 18. | 5439/05 எம்.டி. | வாா்டு எண். 17 பட்டாளம் கோவில் வீதியில் தாா்தளம் புதுப்பித்தல் | 2.00 | 10.01.07 ஐந்தாம் அழைப்பு | திரு. ஏ. ராஜு | 4.25% அதிகம் |
| 19. | 12151/05 எம்.டி.2 | வாா்டு எண். 71 அம்பேத்கா் வீதி அனுகு சாலையில் தாா்தளம் அமைத்தல் | 1.15 | 10.01.07 ஐந்தாம் அழைப்பு | திரு. ஏ. ராஜு | 4.58% அதிகம் |
| 20. | 12150/05 எம்.டி.2 | வாா்டு எண். 72 ராஜரத்தினம் வீதி, குடிசை பகுதிகளில் தாா்தளம் அமைத்தல் | 0.95 | 10.01.07 ஐந்தாம் அழைப்பு | திரு. ஏ. ராஜு | 4.54% அதிகம் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 21. | 9770/05 எம்.டி.2 | வார்டு எண்.6 ல் காந்திநகரில் ஆண்கள் மற்றும் பெண்கள் பொதுக் கழிப்பிடம் கட்டுதல் | 5.00 | 19.01.07 ஐந்தாம் அழைப்பு | திருமதி. பாக்கியம் | 4.52 % அதிகம் |
| 22. | 7116/05 எம்.டி.2 | வார்டு எண்.15 இந்திரா நகர் குடிசைப்பகுதி அனுகு சாலைக்கு (சௌரிபாளையம் சாலை முதல் மசக்காளிபாளையம் பள்ளம் வரை ) தார்தளம் புதுப்பித்தல். | 10.00 | 12-12-06 இரண்டாம் அழைப்பு | திரு. என். ஆறுச்சாமி | 4.82% அதிகம் |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புதல் பெற மாமன்றத்திற்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** வரிசை எண்.1 முதல் 22 வரையிலான பணிகள் குறிப்பிட்ட கால கெடுவுக்குள் முடிக்க வேண்டி இருப்பதாலும், மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதை விட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தாலும் இப்பணிகள் அத்தியாவசிய அடிப்படை வசதிகள் உள்ளதாலும் மதிப்பீட்டை காட்டிலும் கூடுதல் சதவீதம் பெறப்பட்ட பணிகளுக்கு பொறியியல் பணி விதிகளின் படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும், **அனுமதிக்கலாம்.**

**ந.க.எண். 7223/06/எம்.டி.4**

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண். 256 நாள்.02.02.2007</u>**

**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.**

---

**<u>பொருள் எண். 12</u>**

மனுதாரர் திரு. சி. தனசேகர் அவர்கள் தமது 25.07.2006ந் தேதிய மனுவில் கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலத்திற்குட்பட்ட சங்கனூர் கிராமம் மேட்டுப்பாளையம் ரோடு அருகில் ந.அ.எண். 11/7/2பி-ல் ஸ்டில்ட் தளம் 3415.43 சதுர அடி, தரை தளம் 3415.43 சதுரடி , முதல் தளம் 3415.43 சதுர அடி இரண்டாம் தளம் 3415.43 சதுர அடி மூன்றாம் தளம் 3415.43 சதுர அடி பரப்பளவில் 12 குடியிருப்புகள் கொண்ட அடுக்குமாடி பல குடியிப்புக் கட்டிடம் கட்ட திட்ட அனுமதி கோரி பிரேரணைகள் சமர்ப்பித்துள்ளார். ( மேட்டுப்பாளைம் ரோடு முத்து தியேட்டர் எதிர்புறம் உள்ள சாலையில் ரயில்வே லைன் அருகில் இடம் உள்ளது).

.

மேற்படி மனையிடம் ரெயில்வே எல்லையை ஒட்டி ( 8.9 அக்குள் ) உள்ளபடியால் ரெயில்வே மேலாளர், ஓர்க்ஸ், பாலக்காடு அவர்களிடம் இருந்து மேற்குறிப்பிட்ட மனையிடத்தில் பல குடியிருப்புக் கட்டிடம் கட்ட ஆட்சேபனையின்மை சான்று ( No objection certificate ) பெற்று மனுதாரர் சமர்ப்பித்துள்ளார்.

உதவி பொறியாளர் 2வது பிரிவு திட்டம் அவர்கள் தமது 11.07.06-ந் தேதிய குறிப்பில் மேற்குறிப்பிட்ட மனையிடம் தொழிற்பகுதியில் அமைகிறபடியால் அதனை குடியிருப்பு பகுதியாக நில உபயோகம் மாற்றம் செய்யப்பட வேண்டும் என தெரிவித்துள்ளார்.

எனவே மேற்குறிப்பிட்ட அடுக்குமாடி பல குடியிருப்புக் கட்டிடம் கட்ட அனுமதி கோரும் சங்கனூர் கிராமம் மேட்டுப்பாளையம் ரோடு அருகில் ந.அ.எண். 11/7/2பி-ல் மனையிடத்தில் தொழிற்பகுதி நில உபயோகத்தில் இருந்து குடியிருப்பு பகுதியாக நில உபயோக மாற்றம் செய்து உத்திரவு பிறப்பிக்குமாறு கோவை உள்ளூர் திட்டக் குழுமம் வாயிலாக நகர் மற்றும் அபிவிருத்தி நிலைக்குழு தனது தீர்மான எண். 139 நாள் 28.08.2006ல்'' மாமன்றத்திற்குப் பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டது.'' என்று தீர்மானம் நிறைவேறியுள்ளதை மாநகர மன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமர்ப்பிக்கப்பட்டதில் மாமன்றம் தனது தீர்மான எண். 139 நாள் 29.12.2006ல் ''கடந்த மாமன்ற காலத்தில் இப்பொருள் ஒத்திவைக்கப்பட்டது''. எனவும் தற்போது புதிதாக பதவி ஏற்றுக்கொண்டுள்ள நகரமைப்பு மற்றும் அபிவிருத்திக் குழுவிற்கு பொருளினை அனுப்பி குழுவின் பரிந்துரையின் பேரில் மீண்டும் மாமன்றத்திற்கு பொருள் சமர்ப்பிக்கப் தீர்மானிக்கப்பட்டது'' என்று தீர்மானம் நிறைவேறியுள்ளது.

எனவே, பொருள் நகரமைப்பு மற்றும் அபிவிருத்திக் குழுவின் ஒப்புதலுக்கு மீள சமர்பிக்கப்பட்டதில் குழு தனது தீர்மான எண்.12 நாள் 29.1.2007ல் ''தலைவர் குழு உறுப்பினர்கள் மற்றும் அலுவலர்களுடன் இடம் மறு ஆய்வு செய்யப்பட்டது. மனுதாரரின் கோரிக்கையினை மாமன்றத்திற்கு பரிந்துரை செய்ய தீர்மானிக்கப்பட்டது'' . என்று தீர்மானம் நிறைவேற்றியுள்ளதை மாநகரமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு ஒப்புதல் செய்யலாம் .** **ந.க.எண். 7136/2005/எச.1(மே)**

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண். 257 நாள்.02.02.2007</u>**

**நகரமைப்பு மற்றும் அபிவிருத்திக்குழுவின் 29.01.07ம் தேதிய தீர்மான எண்.12ஐ ஏற்று அலுவலகக்குறிப்பு ஒப்புதல் செய்யலாம் என தீர்மானிக்கப்பட்டது.**

---

**<u>பொருள் எண். 13</u>**

மனுதாரர் திரு. ஏ. கருப்பசாமி என்பவர் 16.06.2006-ம் தேதிய விண்ணப்பத்தில், கோவை மாநகராட்சி இராமநாதபுரம் கிராமம், சிங்காநல்லூர் விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.48ல் க.ச.எண். 132, 134, 137A/1 பகுதியில் சிங்காநல்லூர் விரிவு, அபிவிருத்தி திட்டம் எண். 48-ல் 5.92 ஏக்கர் நிலம் உள்ள '' பூங்கா மற்றும் விளையாடுமிடம் '' இடமாக உள்ளதாகவும் அதனை நீக்கம் செய்து குடியிருப்பு பகுதியாக மாற்றம் செய்து தருமாறும் கோரியுள்ளார். மேற்படி இடம் நஞ்சுண்டாபுரம் ரயில்வே கேட் அருகில், நஞ்சுண்டாபுரம் பிரதான சாலையின் மேற்புறம் உள்ள, தென்னந்தோப்பு இடம் ஆகும்.

மனுதாரின் மனையிடம் மாநரகராட்சி வார்டு எண். 12லும் சிங்காநல்லூர் விரிவு அபிவிருத்தி திட்டப்படி மேற்படி இடம் பூங்கா மற்றும் விளையாடும் இடமாக உத்தேசிக்கப்பட்டுள்ளது. புல எண்கள். 132 மற்றும் 134 ஆகியவை முழுமைத்திட்டத்தில் விடுபட்டுள்ளது. புல எண். 137A மற்றும் 137A-ல் உத்தேசிக்கப்பட்டுள்ள A1-A, 80'0'' அகல திட்ட சாலையை அபிவிருத்தி செய்து அச்சாலையின் இடத்தினை மாநகராட்சிக்கு தானமாக ஒப்படை செய்வதாக மனுதாரர் தெரிவித்து உள்ளார்.

உத்தேச நிலத்திற்கும், அணுகுபாதைக்கும் இடையில் வாய்க்கால் உள்ளது. நஞ்சுண்டாபுரம் பிரதான சாலையே மேற்படி இடத்திற்கும் அணுகுசாலையாக அமையும் மேற்படி இடத்திற்கும் எதிரில் குடியிருப்பு காலனிகள் வளர்ச்சி அடைந்து உள்ளது. நிலத்திற்கு பின்புறத்தில் மேலும் ஒரு உத்தேச விளையாட்டு மைதான உத்தேச திட்டம் உள்ளது.

எனவே மேற்படி இராமநாதபுரம் கிராமம், க.ச.எண். 132, 134, 137A/1 பகுதியில் 5.92 ஏக்கர் நிலத்தினை '' பூங்கா மற்றும் விளையாடும்'' பகுதி உபயோகத்தில் இருந்து குடியிருப்பு பகுதியாக மாற்றம் செய்து உத்தரவு பிறப்பிக்குமாறு கோவை உள்ளுர் திட்டக் குழுமம் வாரியாக நகர் ஊரமைப்பு மற்றும் அபிவிருத்தி நிலைக்குழுவிற்கு பொருள் சமர்ப்பிக்கப்பட்டதில், நகரமைப்பு மற்றும் அபிவிருத்தி நிலைக்குழு தனது தீர்மான எண். 138 நாள் 28.08.2006-ல் '' மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டது''. என்று தீர்மானம் நிறைவேற்றியுள்ளதை மாநகரின் மன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமர்ப்பிக்கப்பட்டதில், மாமன்றம் தனது தீர்மான எண். 206 நாள் 29.12.2006ல் '' கடந்த மாமன்ற காலத்தில் இப்பொருள் ஒத்திவைக்கப்பட்டது எனவும் தற்போது புதியாதாக பதவி ஏற்றுக்கொண்டுள்ள நகரமைப்பு மற்றும் அபிவிருத்திக் குழுவிற்கு பொருளினை அனுப்பி, குழுவின் பரிந்துரையின் பேரில் மீண்டும் மாமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது''. என்று நிறைவேற்றியுள்ளது.

எனவே, பொருள் நகரமைப்பு மற்றும் அபிவிருத்திக் குழுவின் ஒப்புதலுக்கு மீள சமா்ப்பிக்கப்பட்டத்தில் குழு தனது தீா்மான எண்.13 நாள் 29.1.2007ல் “ இப்பகுதி சுற்றிலும் குடியிருப்பு காலனிகள் அதிகமாக வளா்ச்சி அமைந்துள்ளது. எனவே இப்பகுதி வாழ் மக்களுக்கு பூங்காவோ அல்லது விளையாட்டு மைதானமோ இப்பகுதியில் இல்லாததால் பூங்கா மற்றும் விளையாடுமிடம் பகுதியினை நில உபயோக செய்ய இயலாத நிலை உள்ளது. மேலும், குழு உறுப்பினா்கள் ஆட்சேபனை தெரிவித்தாலும், மனுதாரரின் கோரிக்கையினை மறுக்கலாம் என தீா்மானிக்கப்பட்டது. என்று தீா்மானம் நிறைவேற்றியுள்ளதை மாநகர மன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமா்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு ஒப்புதல் செய்யலாம் .** **ந.க.எண். 7227/2006/எச்.1 (தெ )**

**<u>மாநகர மன்ற தீா்மானம் எண். 258 நாள்.02.02.2007</u>**

**நகரமைப்பு மற்றும் அபிவிருத்திக்குழுவின் 29.01.07ம் தேதிய தீா்மான எண்.13 ஐ ஏற்று மனுதாரரின் கோரிக்கையினை மறுக்கலாம் என தீா்மானிக்கப்பட்டது.**

---

**<u>பொருள் எண். 14</u>.**

மனுதாரா் திரு. ஆா்.எம்.சுப்பையா சென்னை மனுதாரா் ஹாஸ்பிடாலிட்டி (பி) லிட் நிறுவனத்தினா், கோவை மாநகராட்சி, விளாங்குறிச்சி கிராமம் க.ச.எண். 488/5B, 488/5C, 489/1 பாகத்தில் அமைந்துள்ள 2.82 ஏக்கா் பரப்பளவு மனையிடத்தினை பல அடுக்குமாடி கட்டும் பகுதியாக மாற்றம் செய்து தரக்கோரி நகா் மற்றும் ஊரமைப்பு இயக்குநா், சென்னை அவா்களுக்கு மாநகராட்சி மூலம் விண்ணப்பம் செய்துள்ளனா். ( பீளமேடு அண்ணாநகா் அவினாசி ரோடு திருப்பூா் டெக்ஸ்டைல்ஸ் அருகில் உள்ள இடம் )

மேற்படி மனையிடம் விளாங்குறிச்சி விரிவு அபிவிருத்தி திட்ட எண்.9ன் பகுதியில் அமைகிறது. இத்திட்டத்தின் படி இப்பகுதி தொழிற்சாலை பகுதியாக அமைகிறது. இம்மனையிடத்திற்கு அணுகுபாதையாக நிலையில் உள்ள அவினாசி சாலை அமைகிறது. மேலும் இத்திட்டதின் படி இம்மனையிடத்திற்கும் கீழ்புறத்தில் ‘D-D’ என பெயரிடப்பட்ட 30 அடி அகல திட்ட சாலை உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும் இம்மனையிலிருந்து கிழபுறத்தில் திட்ட சாலைக்காக சாலை விஸ்தீகரிப்புக்கு, இம்மனையிடத்தில் 5 அடி அகலத்திற்கு இம்மனையிடத்தில் உயா் மின் அழுத்த கம்பிகள் மற்றும் குறைந்த மின் அழுத்த கம்பிகள் செல்லுகின்றன. அதனை மனுதாரா் தமது சொந்த செலவில் மாற்றிக்கொள்ள வேண்டும். இம்மனையிடத்தினை ஒட்டி நீரோடைகள் ஏதும் செல்வதில்லை.

எனவே, மேற்படி மனையிடத்தினை பல அடுக்குமாடி கொண்ட கட்டிடம் கட்டும் பகுதியாக மாற்றம் செய்ய நகா் ஊரமைப்புத்துறை இயக்குநா், சென்னை அவா்களுக்கு கோவை உள்ளூா் திட்ட குழுமம் வாயிலாக மாநகர மன்றத்தின் ஒப்புதல் பெற்று அனுப்ப நகரமைப்பு மற்றும் அபிவிருத்திக் குழுவின் முடிவிற்கு பொருள் சமா்ப்பிக்கப்பட்டதில், நகரமைப்பு மற்றும் அபிவிருத்தி நிலைக்குழு தனது தீா்மான எண். 135 நாள் 28.8.2006” மாமன்றத்திற்கு பிரிந்துரை செய்து தீா்மானிக்கப்பட்டது” என்று தீா்மானம் நிறைவேற்றியுள்ளதை மாநகர மன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமா்ப்பிக்கப்பட்டதில் , மாமன்றம் தனது தீா்மான எண். 208 நாள் 29.12.2006ல் “கடந்த மாமன்ற காலத்தில் இப்பொருள் ஒத்திவைக்கப்பட்டது. தற்போது புதியதாக பதவி ஏற்றுக்கொண்டுள்ள பரிந்துரையின் பேரில் மீண்டும் மாமன்றத்திற்கு சமா்ப்பிக்க தீா்மானிக்கப்பட்டது” என்று நிறைவேற்றியுள்ளது.

எனவே, பொருள் நகரமைப்பு மற்றும் அபிவிருத்திக் குழுவின் ஒப்புதலுக்கு மீள சமா்ப்பிக்கப்பட்டதில் குழு தனது தீா்மான எண்.14 நாள் 29.1.07ல் “ நில உபயோக மாற்றம் கோரும் மயைிடத்தில், உயா் மற்றும் குறைந்த மின் அழுத்த கம்பிகள் செல்வதால், இவற்றை மனுதாரா் தமது சொந்த செலவில் அகற்றிய பின்னரும், மற்றும் மனையிடத்தின் கிழ புறத்தில் உள்ள உத்தேச திட்ட சாலையான டி-டி திட்ட சாலை விஸ்தரிப்பிற்கு, இம்மனையிடத்தில் 5அடி அகலத்திற்கு இடத்தினை மாநகராட்சிக்கு தானமாக ஒப்படைத்த பின்னா் மனுதாரரின் கோரிக்கையினை பரிந்துரைக்கலாம் என தீா்மானிக்கப்பட்டது” என்று தீா்மானம் நிறைவேற்றியுள்ளதை மாநகரமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமா்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு ஒப்புதல் செய்யலாம் .** **ந.க.எண். 7496/06/எச்.2 (வ )**

**<u>மாநகர மன்ற தீா்மானம் எண். 259 நாள்.02.02.2007</u>**

**நகரமைப்பு மற்றும் அபிவிருத்திக்குழுவின் 29.01.07ம் தேதிய தீா்மான எண்.14 ஐ ஏற்று அலுவலகக்குறிப்பு ஒப்புதல் செய்யலாம் என தீா்மானிக்கப்பட்டது.**

---

**பொருள் எண். 15**

கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலம் 42வது வார்டு உட்பட நகரளவு வார்டு எண். 3 பிளாக் 8, நகரளவு எண். 509/2, 509/4,511, 512 ஆகிய நிலப்பரப்பினை இதன் உரிமையாளர்கள் பாஸ்யம் இன்வஸ்ட்மெண்ட் நிறுவனத்தினர் மேற்படி இடத்தின் பரப்பு 13 ஏக்கர் 28813 சதுரடி இடத்தினை முழுமை திட்டத்தின் படி தொழிற்சாலை பகுதியாக உள்ளதால், கலப்பு குடியிருப்பு பகுதியாக மாற்றம் செய்யவும் மேலும் நகரளவு எண். 3/509, 2/3,509/4, 3/511, 3/512, 3/508A, 3/511, 3/508C, 3/508/1, 3,509/3 –ன் பரப்பு 16 ஏக்கர் 34/733 சதுரடிகள் கொண்ட இடத்தில் பல மாடி கட்டிடம் கட்டும் பகுதியாக அறிவிக்கவும் கேட்டுக் கொண்டுள்ளார். ( சுண்டக்காமுத்தூர் மயானத்தின் பாலம் தாண்டி கிழபுறம் தென்னை தோப்பாக உள்ள இடம் )

கோயமுத்தூர் நகரமைப்பு திட்டம் எண். 10லும் தொழிற்சாலை பகுதியாக அமைந்துள்ள நகரளவு எண். 509/2, 509/3, 509/4, 511, 512 ஆகிய இடத்தினை பல மாடி கட்டிடம் கட்டும் பகுதியாக அறிவிப்பு செய்யவும், அனுமதி வழங்குவது குறித்து நகரமைப்பு மற்றும் அபிவிருத்தி குழுவின் முடிவிற்கு பொருள் வைக்கப்பட்டதில், குழு தனது தீர்மான எண்.137 நாள் 28.08.2006 “ மாமன்றத்திற்குப் பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டது” என்று தீர்மானம் நிறைவேற்றியுள்ளதை மாநகர மன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமர்ப்பிக்கப்பட்டதில் , மாமன்றம் தனது தீர்மான எண். 209 நாள் 29.12.2006 “கடந்த மாமன்ற காலத்தில் இப்பொருள் ஒத்திவைக்கப்பட்டது எனவும் தற்போது புதிதாக பதவி எற்றுக்கொண்டுள்ள நகரமைப்பு மற்றும் அபிவிருத்திக் குழுவிற்கு பொருளினை அனுப்பி, குழுவின் பரிந்துரையின் பேரில் மீண்டும் மன்றத்திற்கு சமர்ப்பிக்க தீர்மானிக்கப்பட்டது” என்றும் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

எனவே, பொருள் நகரமைப்பு மற்றும் அபிவிருத்திக் குழுவின் ஒப்புதலுக்கு மீள சமர்ப்பிக்கப்பட்டதில் குழு தனது தீர்மான எண். 15 நாள் 29.1.2007ல் “ தலைவர், குழு உறுப்பினர்கள் மற்றும் அலுவலர்களுடன் இடம் மறு ஆய்வு செய்.யப்பட்டது. மனுதாரரின் கோரிக்கையினை மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்ட்டது” என்று தீர்மானம் நிறைவேற்றியுள்ளதை மாநகர மன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு ஒப்புதல் செய்யலாம் .** **ந.க.எண். 9176/06/எச்.1 (தெ )**

**மாநகர மன்ற தீர்மானம் எண். 260 நாள்.02.02.2007**

**நகரமைப்பு மற்றும் அபிவிருத்திக்குழுவின் 29.01.07ம் தேதிய தீர்மான எண்.15 ஐ ஏற்று பொருளில் குறிப்பிடப்பட்டுள்ள நிலம் புன்செய் நிலம் (Dry land) என வருவாய்த்துறையிலிருந்து சான்று பெறப்படவேண்டும் என்ற நிபந்தனையுடன் அலுவலகக்குறிப்பு ஒப்புதல் செய்யலாம் என தீர்மானிக்கப்பட்டது.**

---

**பொருள் எண். 16**

கோயமுத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலம் 54-வது வார்டு உட்பட க.ச.எண். 353/2, 353/1Aய, 354, 355, 336, 357/2A,358,359,360,361/2 361/3 361/4A கோயம்முத்தூர் கிராமம்-ன் மொத்த பரப்பு 21.64 ஏக்கர் நிலப்பரப்பினை இதன் உரிமையாளர் பாஸ்யம் இன்வஸ்ட்மெண்ட் நிறுவனத்தினர் முபமை திட்ட உபயோகத்தின் படி விவசாய விவசாய உபயோகமாக உள்ள மேற்படி நிலத்தினை கலப்பு குடியிருப்பு பகுதியாக மாற்றம் செய்ய கேட்டுள்ளனர். ( சுண்டக்காமுத்தூர் மயானத்தின் பாலம் தாண்டி சாலையில் கிழபுறம் மற்றும் மேற்புறம் உள்ள தோப்புகள் நிறைந்த இடம் ).

மனுதாரர் மனையிடம் கோயமுத்தூர் விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.1லும், முழுமை திட்டத்தின்படி விவசாய பகுதியிலும் அமைகிறது. ஏனவே மேற்படி காலை எண்களுக்குரிய 21.64 ஏக்கர் பரப்புள்ள விவசாய பகுதியை கலப்பு குடியிருப்பு பகுதியாக நில உரிமை மாற்றம் செய்வது குழுவின் முடிவிற்கு பொருள் வைக்கப்பட்டதில், நகரமைப்பு மற்றும் அபிவிருத்தி நிலைக்குழு தனது தீர்மான எண்.136 நாள் 28.08.2006 “ மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டது” என்று தீர்மானம் நிறைவேற்றியுள்ளதை மாநகர மன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமர்ப்பிக்கப்பட்டதில், மாமன்றம் தனது தீர்மான எண். 210 நாள் 29.12.2006ல் “ கடந்த மாமன்ற காலத்தில் இப்பொருள் ஒத்திவைக்கப்பட்டது எனவும் தற்போது புதிதாக பதவி ஏற்றுள்ள நகரமைப்பு மற்றும் அபிவிருத்திக் குழுவிற்கு பொருளினை அனுப்பி, குழுவின் பரிந்துரையின் பேரில் மீண்டும் மாமன்றத்திற்கு சமர்ப்பிக்க தீர்மானிக்கப்பட்டது” என்று தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

எனவே, பொருள் நகரமைப்பு மற்றும் அபிவிருத்திக் குழுவின் ஒப்புதலுக்கு மீள சமா்ப்பிக்கப்பட்டதில் குழு தனது தீா்மானம் எண். 16 நாள் 29.1.2007ல் "தலைவா், குழு உறுப்பினா்கள் மற்றும் அலுவலா்களுடன் இடம் மறு ஆய்வு செய்யப்பட்டது. மனுதாரரின் கோரிக்கையினை மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீா்மானிக்கப்பட்டது" என்று தீா்மானம் நிறைவேற்றியுள்ளதை மாநகரமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமா்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு ஒப்புதல் செய்யலாம் .** **ந.க.எண். 9175/2006/எச்.1 (தெ )**

**<u>மாநகர மன்ற தீா்மானம் எண். 261 நாள்.02.02.2007</u>**

**நகரமைப்பு மற்றும் அபிவிருத்திக்குழுவின் 29.01.07ம் தேதிய தீா்மான எண்.16 ஐ ஏற்று பொருளில் குறிப்பிடப்பட்டுள்ள நிலம் புன்செய் நிலம் (Dry land) என வருவாய்த்துறையிலிருந்து சான்று பெறப்படவேண்டும் என்ற நிபந்தனையுடன் அலுவலகக்குறிப்பு ஒப்புதல் செய்யலாம் என தீா்மானிக்கப்பட்டது.**

---

**<u>பொருள் எண். 17</u>**

மனுதாரா் திரு.விக்ரம் மோகன், இயக்குநா் என்பவா் பிரிக்கால் பிராப்பா்டி டெவலப்மென்ட் லிமிடெட், கோவை தனது மனுவில் சௌரிபாளையம் கிராமம் சா்வே எண்கள். 394/1, ( பாகம் ) 395/1 ( பாகம் ) 391/2 ( பாகம் ) பகுதி மற்றும் கிருஷ்ணராயபுரம் கிராமம் சா்வே எண்கள் 332 ( பாகம் ) 333/3A,333/3B பகுதி மற்றும் 33/3கு பகுதியில் உள்ள மனுதாரருக்குச் சொந்தமாக 3.54 ஏக்கா் நிலத்தை தொழிற்சாலைப் பகுதியிலிருந்து குடியிருப்பு பகுதியாக நில உபயோக மாற்றம் செய்து, பலமாடி கட்டிடம் கட்டும் பகுதியாக அறிவிக்க கோரியுள்ளாா்.

மனுவில் குறிப்பிட்ட இடம் அவிநாசி சாலை நவ இந்தியா சந்திப்புக்கு வடபுறம், எஸ்.என்.ஆா் பல் மருத்துவக் கல்லூரிக்கு எதிா்புறமுள்ள காலி நிலமாகும். மேற்படி நிலம் முழுமைதிட்டத்தின் படியும், சிங்காநல்லூா் விரிவு அபிவிருத்தித்திட்டம் 19 இன்படியும் தொழிற்சாலை பகுதியில் உள்ளது. மேற்படி நிலத்திற்கு காலியிட வரி செலுத்தப்பட்டுள்ளது. வட்டாச்சியரின் சான்று பெறப்பட்டுள்ளது. மேற்படி நிலத்திற்கு நவ இந்தியா சாலை அணுகு சாலையாக உள்ளது. இப்பகுதி கலப்பு நில உபயோகமாக அபிவிருத்தியடைந்து வருகிறது. குடியிருப்பு பகுதியாக மாற்றவும் பலமாடி கட்டிடம் கட்டும் பகுதியாக அறிவிக்கவும் தகுதியான இடம், எனவே மேற்படி இடத்தை தொழிற்சாலை நில உபயோகத்திலிருந்து குடியிருப்பு நில உபயோகமாக மாற்றவும், பின்னா் அதனை தமிழ்நாடு பலமாடி கட்டிடம் மற்றும் பொது கட்டிட விதிகள், 1973, விதி 4இன் கீழ் பலமாடி கட்டிடம் கட்டும் பகுதியாக அறிவிக்கவும் கோறும் மனுதாரரின் மனு நகரமைப்பு குழுவின் பாா்வைக்கும் முடிவுக்கும், சமா்ப்பிக்கப்படுகிறது. குழு தனது தீா்மான எண்.17 நாள் 29.1.2007ல் " இடம் குழுவால் ஆய்வு செய்யப்பட்டது. மனுதாரரின் கோரிக்கையினை மாமன்றத்திற்கு பரிந்துரை செய்ய தீா்மானிக்கப்பட்டது". என்ற தீா்மானம் நிறைவேற்றியுள்ளதை மாநகரமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமா்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு ஒப்புதல் செய்யலாம் .** **ந.க.எண். 1014/06/எச்.2 (வ )**

**<u>மாநகர மன்ற தீா்மானம் எண். 262 நாள்.02.02.2007</u>**

**நகரமைப்பு மற்றும் அபிவிருத்திக்குழுவின் 29.01.07ம் தேதிய தீா்மான எண்.17 ஐ ஏற்று அலுவலகக்குறிப்பு ஒப்புதல் செய்யலாம் என தீா்மானிக்கப்பட்டது.**

---

**<u>பொருள் எண். 18.</u>**

நிா்வாக பொறியாளா், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் அவா்களின் நே.மு.கடித எண். 1239, கு.ப.மா/கோ.கோ / எல்.ஏ / 2006 நாள் 25.1.2007-ம் தேதிய கடிதத்தில், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம், கோவை கோட்டத்தின் மூலம் கோவை மாநகராட்சியுடன் இணைந்து ஜவஹா்லால் நேரு நகா்புற வளா்ச்சித் திட்டத்தின் கீழ் கோவை தெற்கு வட்டம், கோவை ரூரல் கிராமம், அளவை எண்கள் 107 பாகம், 108 பாகம் 109, 110, 111, 112, 113 பாகம், 114 பாகம், 119 பாகம், 120 பாகம் 121, 122, 123 மற்றும் 124 பாகம் இல் உள்ள 15.0 ஏக்கா் உக்கடம் கழிவு நீா் பண்ணை நிலத்தில் 2232 அடுக்கு மாடிக் அடுக்குமாடி குடியிருப்புகள் கட்ட திட்ட மதிப்பீடுகள் ரூ. 55.40/- கோடி மதிப்பில் தயாரிக்கப்பட்டு திட்டம் வரைபட ஒப்புதலுக்கு அனுப்ப கோவை மாவட்ட திட்ட வரைபடத்தை ஆய்வு செய்யப்பட்டதில் மேற்படி நிலங்கள் விவசாய நில உபயோகப் பகுதியில் உள்ளது என்றும், இந்நிலத்தை குடியிருப்பு நில உபயோகமாக மாற்ற மாநகராட்சியின் பரிந்துரையினை, மாநகராட்சியின் தீா்மான வடிவில் அனுமதி வழங்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அளவை எண்கள் 107 பாகம், 109,110,111,112,113 பாகம் 114 பாகம், 119 பாகம், 120 பாகம் 121, 122, 123 மற்றும் 124 பாகம் -இல் உள்ள 15. ஏக்கர் பரப்புள்ள இடம் கோயமுத்தூர் ரூரல் கிராமம் விரிவு அபிவிருத்தித் திட்டம் எண். 3லும், முழுமை திட்டத்திட்டத்தின்படி விவசாய பகுதியிலும் அமைந்துள்ளது. தற்போது மாநகராட்சியின் பராமரிப்பில் உள்ள இடமாகும்.

எனவே, மேற்படி 15.0 ஏக்கர் நிலத்தை விவசாய உபயோகத்தில் இருந்து குடியிருப்பு நில உபயோக பகுதியாக மாற்றம் செய்ய நகரமைப்பு மற்றும் அபிவிருத்திக் குழுவின் ஒப்புதலுக்கு பொருள் சமர்ப்பிக்கப்பட்டதில் குழு தனது தீர்மான எண்.18 நாள் 29.1.2007ல் ''இடம் குழுவால் ஆய்வு செய்யப்பட்டது. நில உபயோக மாற்றம் செய்ய அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது''. என்று தீர்மானம் நிறைவேற்றியுள்ளதை மாநகரமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு ஒப்புதல் செய்யலாம் .** **ந.க.எண். 106119/2006/MH 5**

**மாநகர மன்ற தீர்மானம் எண். 263 நாள்.02.02.2007**

**நகரமைப்பு மற்றும் அபிவிருத்திக்குழுவின் 29.01.07ம் தேதிய தீர்மான எண்.18 ஐ ஏற்று அலுவலகக்குறிப்பு ஒப்புதல் செய்யலாம் என தீர்மானிக்கப்பட்டது.**

---

**பொருள் எண். 19.**

ஈட்டுத் தொகை – கோவை மாநகராட்சி – கிழக்கு மண்டலம் - ராமநாதபுரம் 80 அடி திட்ட சாலைக்கு மாநகராட்சியால் கையகப்படுத்தப்பட்ட நிலத்திற்கும் ஈட்டுத் தொகை வழங்குவது – சம்பந்தமாக.

திரு.என். பழனிசாமி, கதவு எண். 13, பாரதி நகர் முதல் வீதி, இராமநாதபுரம், கோயமுத்தூர் அவர்கள் தமது 05.01.2006ம் தேதிய விண்ணப்பத்தில், தனக்கு சொந்தமான 8800 சதுரடி நிலம் 80 அடி திட்ட சாலை அமைப்பதற்காக மாநகராட்சியால் நில எடுப்பு செய்யப்பட்டது என்றும் , மேற்படி நிலத்திற்குரிய இழப்பீட்டுத் தொகை மாநகராட்சி வழங்க வேண்டும் என சென்னை உயர் நீதி மன்றத்தில் வழக்கு தொடரப்பட்டதில் 31.8.2004ம் தேதிய தீர்ப்பில் மனுதாரருக்கு மாநகராட்சி இழப்பீட்டு தொகை வழங்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டதன் பேரில் , சதுரடி ஒன்றிற்கு ரூ.83/- வீதம் 6720 சதுரடிக்கு ரூ.5,57,760/- வழங்கப்பட்டது என்றும், திருமதி நாகாத்தாள் , திரு. வேலுசாமி ஆகியோருக்கு மாமன்ற தீர்மான எண்.334 நாள் 28.12.2001ன் படி சதுரடி ஒன்றிற்கு ரூ 140 வீதம் இழப்பீட்டு தொகை வழங்கப்பட்டது என்றும், அவர்களுக்கு வழங்கியது போல சதுரடி ஒன்றுக்கு ரூ.14/- வீதம் வித்தியாச இழப்பீட்டு தொகை சதுரடி ஒன்றிற்கு ரூ.140/- வீதம் வித்தியாச இழப்பீட்டுத் தொகை சதுரடி ஒன்றிற்கு ரூ.57/- வீதம் வழங்குமாறும் மேலும் தமது இடம் திட்ட சாலைக்குரிய பரப்பளவு 8800 சதுரடி மட்டுமே கண்க்கீடு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்ததுடன் மறு அளவை செய்யுமாறும் கோரியுள்ளார்.

மேற்படி மனுதாரர் பூமி இராமநாதபுரம் கிராமம், நகரளவு எண். 2238/2 பாகம் ஏற்கனவே நில அளவையரால் சர்வே செய்யப்பட்டு 6720 சதுரடி என்ற நிர்ணயம் செய்யப்பட்டதின் பேரில் சதுரடி ஒன்றுக்கு ரூ.83/- வீதம் 6720 சதுரடி ரூ.5,57,760 /- மாநகர மன்ற தீர்மானம் என்.151 நாள் 28.09.2005 தீர்மான ஒப்புதலின்படி மனுதாரருக்கு வழங்கப்பட்டது.

திரு. சின்னராஜ் என்பவருக் சென்னை உயர்நீதிமன்ற தீர்ப்புரை அடிப்படையில் ரூ.83/- சதுரடி ஒன்றிற்கு இழப்பீட்டு தொகை ஏற்கனவே இந்நேர்வுகளுக்கு வழங்கப்பட்டது (W.Pஎண் 12721/1994 ) இதன் அடிப்படையிலேயே மனுதாரர் திரு. பழனிசாமிக்கு இழப்பீட்டுத் தொகை 07.11.2005-ல் வழங்கப்பட்டது.

மேற்படி மனுவில் குறிப்பிட்டுள்ள நபர்களான திரு. வேலுசாமி, திருமதி. நாகாத்தாள் ஆகியோருக்கு மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களின் 45382/2001/உகு3 நாள் 13.7.2002-ல் சதுரடி ஒன்றிற்கு ரூ.140/- என்ற அடிப்படையில் நில மதிப்பு நிர்ணயம் செய்ததின் அடிப்படையில் 12.08.2002-ல் தொகை வழங்கப்பட்டுள்ளது.

எனவே மனுதாரருக்கு மாமன்ற தீர்மான எண்.151 நாள் 28.09.2005-ன் பேரில் 6720X83/- = ரூ5,57,760/-வழங்கியது போக மீதித் தொகை 6720X57/- = ரூ. 3,83,040/-ஐ திரு. பழனிசாமி என்பவருக்கு வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டதில் மாநகர மன்ற தீர்மான எண். 128, நாள் 14.09.2006-ல் விண்ணப்பதாரரை நீதிமன்ற உத்திரவு பெற்று விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளலாம் என ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது. விண்ணப்பதாரர் 01.12.2006-ம் தேதி இழப்பீட்டுத் தொகை தரும்படி மீண்டும் கோரியுள்ளதை முடிவு செய்யும் பொருட்டு மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு மாமன்றம் முடிவு செய்யலாம் . எண். 13769/2006/H 1**

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண். 260 நாள்.02.02.2007</u>**

**விண்ணப்பத்தாரரின் கோரிக்கையினை ஏற்று சதுர அடி ஒன்றுக்கு ரூ.140/- என்ற அடிப்படையில் இழப்பீட்டுத் தொகை நிர்ணயம் செய்து, ஏற்கனவே வழங்கிய தொகை போக, மீதித்தொகை வழங்க முடிவு செய்யப்பட்டது. மேலும் 80 அடி திட்டசாலை அமைப்பதற்காக நில எடுப்பு செய்யப்பட்டு, இழப்பீட்டுத் தொகை பெற உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடுத்து உத்திரவு பெற்றவர்களான திரு.கே.அருணாச்சலம், திரு.கே.ஆறுமுகம், திருமதி.விஜயலட்சுமி ஆகியோருக்கும் சதுர அடி ஒன்றுக்கு ரூ.140/- என்ற அடிப்படையில் நிர்ணயம் செய்து வழங்கவும் தீர்மானிக்கப்பட்டது.**

---

**(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்**
**மேயர்**
**கோயம்புத்தூர் மாநகராட்சி**